உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 ] பிலவங்க - புரட்டாசி - 10—10—67 [ இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## முதல்வியர் மூவர்

உலகம் எல்லாவற்றையும் ஆக்கியும் காத்தும், அழித்தும் நடத்துகின்ற சத்தி ஒருத்தியே. எனினும், அவள் காரிய வேறுபாட்டால் ஒருவகையில், 'ஆரணி, சேனனி, இரோதயித்திரி' என மூன்று சத்தியாயிருக்கின்றாள். மற்றொருவகையில் 'பரவாகீசுவரி, அபரவாகீசுவரி, மனோன்மனி, மகேசுவரி, உமை, திரு, வாணி' என ஏழு சத்திகளாய் விளங்குகிறாள். இன்னும் ஒரு வகையில், 'வாமை, சேட்டை, இரௌத்திரி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி, மனோன்மனி' என எட்டுச் சத்திகளாய்த் திகழ்கின்றாள். இன்னும் அவள் விளங்கும் வகைகள் எத்தனை எத்தனையோ! எத்தனைவகையான

பெயரும், தொழிலும், வடிவும் சொல்லப்படினும், உண்மையில் அவள் ஒருத்தியே.

> "சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னாகி
> ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி
> வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வரும்சத்தி ஒருத்தி யாகும்;
> எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள்"

என்கின்றது சிவஞானசித்தி.

ஒரு சத்தியே இவ்வாறெல்லாம் பல்வேறு வகைப்பட்டு நிற்பது, உயிர்களுக்குப் பலவகையான பயன்களையும் கொடுத்தற் பொருட்டேயாம். பலவகைப் பயன்களும், 'போகம், மோட்சம்' என்னும் இருவகையில் அடங்கும். பலவகைப் பிறப்புக்களைக் கொண்டு உலகில் அனுபவிக்கப் படும் பயன்கள் யாவும் போகம். பிறவியற்ற நிலை மோட்சம்.

உலகப் பயன்களை 'கல்வி, செல்வம், வெற்றி' என மூன்றாகக் கூறலாம். கல்வியாலும் செல்வம் உண்டாகும்; வெற்றியாலும் செல்வம் உண்டாகும். செல்வம் உண்டாகுமாயின், இன்பம் தானே உண்டாகும் என்பது சொல்ல வேண்டா. கல்வியும், வெற்றியும் புகழைத் தாமே தந்துவிடும். செல்வத்தினாலும் புகழைத் தேடிக்கொள்ளலாம். புகழ் உலகப்பயன்களில் சிறந்த ஒன்றாகலின், மக்கள் அதனை விரும்புதல் இயல்பாகின்றது. அதனைக் கல்வி முதலிய மூன்றும் தரும் என்பதைக் கண்டோம்.

கல்வி, செல்வம், வெற்றி என்னும் இவைகளை வேண்டுவார்க்கு வேண்டியவாறே தருதற்பொருட்டு, எல்லாவற்றிற்கும் முதல்வியாகிய சத்தி, கலைமகள், திருமகள், கொற்றவை என மூவராய் நிற்கின்றாள். கலைமகளது திருவருளைப் பெற்றுக் கல்வியிற் சிறந்து விளங்கினோர் பலர். கவிச்சக்கரவர்த்தி கம்பநாடரும் கலைமகள் திருவருள் பெற்றே சிறப்புற்றார் எனக் கூறப்படுகின்றது. குமரகுருபர அடிகள் காசியில் 'சகலகலாவல்லி மாலை' என்னும் நூலால் கலைமகளைத் துதித்து இந்திமொழியறிந்து மொகலாய மன்னனுடன் உரையாடித் தமது பெருமையை நிறுவி, அம்மன்னனால் நன்கு மதிக்கப்பெற்றார்.

"அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்"

என்பது முதலிய குறள்களில் செல்வத்தின் முதல்வீ திருமகள் என்பதைத் திருவள்ளுவரே குறிப்பீடுதல் காணலாம்.

'வெற்றியைத் தருபவள் கோற்றவை' என்பது தமிழ் நூல்களில் தெளிவாக விளங்குவது. புறத்திணைத் துறைகளில், 'கொற்றவை நிலை' என்பது ஒன்று. அது, கோற்றவையை அரசர்களும், போர்வீரர்களும் வழிபடுவதும், அவர்கட்கு அவள் வெற்றியைத் தருவதும் ஆகியவற்றைக் கூறுவது. கோற்றவையே, 'துர்க்கை' எனப்படுகின்றாள்.

"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை - மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும்"

என்னும் வெண்பாமாலைப் பாட்டு, கோற்றவையது வடிவத்தையும், அவள், தன்னை வழிபடுவோர்க்கு அவர்தம் பகைவரை அழித்து வெற்றிதா முன்னிற்பதையும் குறிப்பது. சிலப்பதிகாரத்து வேட்டுவ வரியுள் கோற்றவை, அம்பிகையின் கூருகவே வருணிக்கப்படுகின்றாள்.

நம் நாட்டில் இன்று ஒரு சிலர்க்கு மட்டுமன்றி நாடு முழுவதற்குமே வெற்றியும், செல்வமும், கல்வியும் வேண்டப்படுவனவாகின்றன. வெற்றி முதலிய மூன்றும், எந்நாட்டிற்கும், எந்நாளிலும் வேண்டப்படுவனவே: இவை வேண்டா என்பது எங்கும் எக்காலத்திலும் இல்லை. ஆயினும், ஒவ்வோரிடத்தில் ஒவ்வோருகாலத்தில் ஒவ்வொன்றைச் சிறப்பாக நாடிநிற்கும் நிலை உண்டாகின்றது. இன்று நம் நாடு இம் மூன்றையுமே நாடிநிற்கும் நிலையில் உள்ளது. அதனால், வெற்றிக்கு முதல்வியாகிய கோற்றவையும், செல்வத்திற்கு முதல்வியாகிய திருமகளும், கல்விக்கு முதல்வீயாகிய கலைமகளும் ஆகிய முதல்வியர் மூவரையுமே பலவகைச் சிறப்புக்களுடன் வழிபடுதல் இன்றியமையாததாகின்றது.

இம் முதல்வியர் மூவருமாய் நிற்கும் சத்தியைப் பொது வாக நாம் என்றும் வழிபடுதல் கூடுமாயினும், இம்முறையில் பகுத்தெண்ணிச் சிறப்பாக வழிபடுதற்கு உரிய நாட்கள், 'நவராத்திரி' எனப்படும் ஒன்பது நாட்களே. புரட்டாசித் திங்கள் வளர்பிறை முதல்நாள் தொடங்கி வரும் இவ்வொன்பது நாட்களில் முதல் மூன்று நாட்களில் கொற்றவையும், இடை மூன்று நாட்களில் திருமகளும், இறுதி மூன்று நாட்களில் கலைமகளும் சிறப்பாக வழிபடப்பெறுவர். இவையன்றி நவமிக்கு முன்னுள்ள அட்டமியும், பின்னுள்ள தசமியுங்கூடக் கொற்றவைக்கு உரிய நாட்களாகும். இந் நாட்களில் இம் முதல்வியர் மூவரையும் தங்கள் தங்கள் இல்லங்களில் முறைப்படி சிறப்பாக வழிபடுவோர், எடுத்த செயலில் வெற்றியும், செல்வமும், கல்வியும் பெறுவர். கோயில்களில் இவ்வழிபாட்டினைச் சிறப்புற நடத்தின், நாட்டிற்கு இவை மூன்றும் உண்டாகி நலம்பெருகும். இது பற்றியே இந் நவராத்திரிச் சிறப்பு, கோயில்களில் நன்கு கொண்டாடப் படுகின்றது.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிக ளவர்கள் தங்கள் ஆதீனக் கோயில்கள் பலவற்றிலும் இந் நவராத்திரிவிழா பலவகைச் சிறப்புக்களுடன் இனிது நிகழத் திருவுளம்பற்றியும், தருமையில் கோயில்கொண்டிருக்கும் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் கோடி அர்ச்சனை, சதசண்டியக்ஞம் முதலியவற்றை அன்பர்கள் பலர் கண்டு களித்து வணங்கிப் பயன்பெறும் வண்ணம் பெரிய அளவில் மிகச் சிறப்பாகத் தாங்களே முன்னின்று நடத்தியும் அருளுகின்றார்கள். அவர்களது திருவுளக் கருத்தின்படியே முதல்வியர் மூவரும் அன்பர்கள் அனைவர்க்கும், நாட்டிற்கும் வெற்றியையும், செல்வத்தையும், கல்வியையும் தந்து நல்லருள் பாலிப்பார்களாக.

வாழ்க கயிலைக் குருமணி அவர்கள் !

வாழ்க அவர்கள் அருட்செங்கோல் !

உ

குருபாதம்

# திருவள்ளுவரும் திருஞானசம்பந்தரும்

## குருவருள்

'பொதுநெறி, மெய்ந்நெறி' என நன்னெறி இருவகைப் படும். அதனால், நன்னெறியைக் கூறும் நூல்களும், 'பொது நூல், சிறப்பு நூல்' என இருவகைப்பட்டு நிற்கும். பொது நூல், நன்னெறியை அதனை விரும்பும் பலர்க்கும் ஏற்புடைய வகையில் பொதுப்படவே கூறும். அதற்குப் பயன், பின்னர் அவர் நன்னெறியைச் சிறப்பு வகையில் நன்குணர்ந்து அதன் உண்மைப் பயனைப் பெறுதலேயாகும். ஆயினும், இடைநிலைப் பயனாக அறமும், பொருளும், இன்பமும் பொதுநெறியால் உண்டாகும். பொதுநெறியால் நேரே பெறப்படும் பயன் அறம் முதலிய மூன்றுமே யாதலாலும், அவை மூன்றும் உலகில் நின்று பெறப்படுவன ஆதலாலும் பொதுநெறியை, 'உலகியல்' எனக் கூறுவர் உயர்ந்தோர். எனவே, பொது நூல் உலகியல் நூலேயாதல் தெளிவு.

நன்னெறியின் உண்மைப் பயனாவது, புல், பூடு, புழு, மரம் முதலாக, சுரர், அசுரர், மனிதர் ஈறாக உள்ள தாபர சங்கமங் களில் எல்லாப் பிறப்பிலும் சென்று பிறந்து, அலைந்து, இறந்து, மீண்டும் பிறந்து இவ்வாறு உழலாமல், என்றும் ஒருநிலையாய் நின்று பேரின்பத்தை நுகர்ந்திருக்கும் வீட்டுநிலையாம். இந் நிலை என்றும் ஒரு பெற்றியாய் நிற்கும் மெய்ப்பொருளை உணர்தலாலே கிடைப்பதால், அதனை உணரும் நெறியை 'மெய்ந்நெறி' என உயர்ந்தோர் கூறுவர். இம்மெய்ந் நெறி யைக் கூறுவனவே சிறப்பு நூல்கள்.

"உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்"

எனச் சேக்கிழார் அருளிச் செய்தலால், 'வேதம் பொதுநூல்' என்பதும், 'சிவாகமம் சிறப்புநூல்' என்பதும் நன்கறியப் படுகின்றன.

" வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும்என் றுள்ளன "

என்ற திருமூலர் திருவாக்கு, இதனைத் தெளிவாகவே விளக்கு கின்றது.

" சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல "

என்ற ஆன்றோர் சொற்படி, பொருளும், இன்பமும் அறத்தின் வழிப்பட்டனவாதலின், அறம் முதலிய மூன்றையும் கூறும் பொதுநூல், 'அறநூல்' என்றே சொல்லப்படும். அதன் பயனும் அறமும், அது வழியாக வரும் பொருளும், இன்பமுமே யாம். சிறப்புநூல் மெய்ந்நெறியைக் கூறுதலால், அதுவே, 'மெய்ந்நூல்' எனப்படும். அதன் பயனும் மெய்யுணர்வும், அது வழியாக வரும் வீடு பேறுமாம். ஆகவே, வேதம் பொது நூலாதலின் அதன்பயன் அறமும், சிவாகமம் சிறப்பு நூலாதலின் அதன்பயன் வீடுபேறுமாம் என்பது சொல்ல வேண்டா. "மதுர வாசகம் — ஓதின் முத்தி உறுபயன் — வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே" என்ற சிவப்பிரகாசர் வாக்கு இங்கு நினைக்கத் தக்கது.

வடமொழியில் வேதம் பொதுநூலாய் இருத்தல்போலத் தமிழ்மொழியில் பொதுநூலாய் விளங்குவது திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள் என்பதும், அது, 'பொதுமறை' என யாவராலும் போற்றப்படுவது என்பதும் அனைவரும் அறிந்தவை. வேதமும், திருக்குறளும் ஒருநிகரன என்பதை,

" ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின்இது
சீரியது என்றொன்றைச் செப்பரிதால்; — ஆரியம்
வேதம் உடைத்து, தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து '

என்ற வள்ளுவமாலைச் செய்யுள் இனிது விளக்குகின்றது.

வடமொழியில் சிவாகமம்போலத் தமிழ்மொழியில் சிறப்பு நூலாய் விளங்குவன தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள். இதனை,

"பன்மறையோர் செய்தொழிலும், பரமசிவா கமநெறியும்
நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றனையே"

என நம்பியாண்டார் நம்பிகள், ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகத்தில் அருளியவாற்றால் அறியலாம். இத்திருவாக்கில், 'பொதுநூலில் குறிப்பாக உள்ள பொருள்களை இனிது விளக்குவதே சிறப்புநூல்' என்னும் கருத்து அமைந்திருத்தல் காணலாம்.

வடமொழியில், 'வேதம் பொதுநூல்' என்பதைப் பலரும் உடன்படுவர். ஆயினும், 'சிவாகமம் சிறப்புநூல்' என்பதைச் சைவ சமயிகள் தவிர ஏனையோர் உடன்படமாட்டார்கள். அவர்கள் உடன்படாததனால் சிவாகமம் சிறப்பு நூலாகாமற் போகாது. அதுபோலவே, தமிழில், 'திருக்குறள் பொதுநூல்' என்பதைப் பலரும் உடன்படுவர். ஆயினும், 'திருமுறைகள் சிறப்புநூல்' என்பதைச் சைவ சமயிகள் தவிரப் பிறர் உடன் படார். அவர் உடன்படாதது பற்றித் திருமுறைகள் சிறப்பு நூலாகாமற்போய்விட மாட்டா மற்றும், வடமொழியில் உள்ள பொது நூலாகிய வேதத்தை உடன்படாதவர் சிலர் இருக்கின் றார்கள். அதுபோலவே தமிழில் உள்ள பொதுநூலாகிய திருக்குறளையும் முற்றிலும் உடன்படாதவரும் இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் உடன்பாடின்மையை நேரே கூறாமல், சில அதிகாரங்கள், 'திருவள்ளுவர் செய்தன அல்ல' என்றும், சில குறள்களுக்கு, 'இது பொருளன்று; வேறு பொருளே உள்ளது' என்றும் இவ்வாறு கூறுவர். அவர்கள் அவ்வாறு கூறினும், திருக்குறள் என்றும், எங்கும் ஓர் ஒப்புயர்வற்ற பொதுநூலாய் விளங்குவதன்றி வேறாகாது. அது போலவே, திருமுறைகளும் யார் உடன்படினும், படாவிடினும் ஒப்புயர்வற்ற சிறப்பு நூலேயாம். இவ்வுண்மைகள் யாவும், காய்தல் உவத்தல் இன்றி நடுவுநின்று காண்பவர்கட்கு நன்கு விளங்கும்.

பொதுநூலிலும், சிறப்புநூலிலும் சொல்லப்படும் பொருள் ஒன்றே; அப்பொருளைச் சொல்லும் முறைதான் வேறு. 'வேதத்திற்கும், ஆகமத்திற்கும் யாம் பேதம் கண்டிலம்' என்று நீலகண்ட சிவாசாரியர் சிவாத்துவித பாடியத்திற் கூறியதும் இக்கருத்துப் பற்றியதே. அவ்வாறே. 'திருக்குறளி லும், திருமுறைகளிலும் சொல்லப்பட்ட பொருள் ஒன்றே;

சொல்லும் முறைதான் வேறு' என்பதற்கு எடுத்துக்காட்டாக, முதற்கண் உள்ள திருஞானசம்பந்தர் திருமுறைகளுள் ஒன்றிரண்டைக் காணலாம்.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்னும் திருக்குறளில் திருவள்ளுவர், உலகத்தார்க்கு 'ஒழுக்க நெறியை இறைவனே வகுத்துக் காட்டினான்' எனக் கூறுகின்றார். ஒழுக்க நெறியாவது, 'அறம். பொருள், இன்பம், வீடு' என்னும் நான்கைப் பற்றியது என்பது வெளிப்படை. இதனைத் திருஞானசம்பந்தர் தமது திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில்,

"...................................ஐம்புலனும்
அழிந்த சிந்தை அந்த ணாளர்க்கு
அறம் பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி
மேயதுமுது குன்றே"

எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

என்னும் திருக்குறளில் திருவள்ளுவர், 'இறைவன் பல்வேறு அறங்களையும் தனக்கு வடிவமாக உடையவன்' எனக் குறிக்கின்றார். ஞானசம்பந்தரும்,

"அருத்தனை அறவனை அமுதனை"

என்னும் திருப்பாட்டில், இறைவனை, 'அறவன் - அறத்தின் வடிவமானவன்' எனக் கூறுகின்றார். இன்னும்,

"இன்னஉரு இன்னநிறம் என்றறிவ தேல்அரிது;
நீதிபலவும்
தன்னஉரு வாம்என நிறைந்ததவன் நீதியொடு
தான் அமர்விடம்"

என்பதும் அவர் வாக்கு. 'மனத்துக்கண் மாசின்மையே அறம்' என்பதும், 'மனத்துமாசாவன, அழுக்காறு, அவா,

வெகுளி, பிறர்பொருளை விரும்பல், உள்ளத்தில் உள்ளதை மறைத்து வேறொன்று பேசுதலாகிய பொய்ம்மை, வெகுளியை வெளிப்படுத்தும் கடுஞ்சொல் முதலியன என்பதும், இம்மாசுகள் இல்லாதவர்களே அறவோர் என்றும், உயர்ந்தோர் என்றும் போற்றப்படுவர்' என்பதும் திருவள்ளுவர் கருத்துக்கள் என்பது, திருக்குறளில் ஆங்காங்கு வரும் குறட்பாக்களில் இனிது விளங்கிக் கிடப்பது. இவைகளையெல்லாம் இங்ஙனமே ஞானசம்பந்தரும் ஆங்காங்கு அருளிச் செய்வதைக் காணலாம்.

" ஒல்லை ஆறி, உள்ளம் ஒன்றிக்
கள்ளம் ஒழிந்து, வெய்ய
சொல்லை ஆறித் தூய்மை செய்து,
காமவினை அகற்றி,
நல்ல வாறே உன்றன் நாமம்
நாவில்நவின் றேத்த
வல்ல வாறே வந்து நல்காய்
வலிவலம்மே யவனே "

" மெய்ய ராகிப் பொய்யை நீக்கி
வேதனையைத் துறந்து
செய்ய ராஞர் சிந்தை யானே
தேவர்குலக் கொழுந்தே "

என்பனபோன்ற திருப்பாட்டுக்கள் அவரது திருமுறைகளில் நிரம்ப உள்ளன.

'இரப்பவர்க்கு இல்லை என்னாது கொடுத்தல் சிறப்புடைய அறம்' என்று திருவள்ளுவர் கூறுவதை யாவரும் அறிவர்.

" ஈதல்; இசைபட வாழ்தல்; அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு "

என்பதுபோன்ற திருக்குறள்கள் அங்ஙனம் கூறுவன. இதனை ஞானசம்பந்தர் தமது தேவாரத்துள் பல இடங்களில் குறிப்பிடுதலைக் காணலாம்.

" இரவலர் துயர் கெடுவகைநினை
இமையவர்புரம் எழில்பெறவளர்
மரம்நிகர்கொடை மனிதர்கள் பயில் மறைவனம் "

" இன்மையால் சென்றிரந்தார்க்கு
இல்லையென்னாது ஈந்துவக்கும்
தன்மையார் ஆக்கூர் "

" விண்பொய்யத னால்மழை விழாதொழியி
னும்விளைவு தான்மிகவுடை
மண்பொய்யத னால்வளம் இலாதொழியி
னுந்தமது வண்மைவழுவார் சண்பைநகர் "

என்பனபோன்ற பாடல்கள் பல.

" உரனென்னும் தோட்டியான் ஓர்ஐந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்குஓர் வித்து "

என்னும் திருக்குறளில் திருவள்ளுவர், ' 'பஞ்சேந்திரியங்கள்' எனப்படும் ஐம்பொறிகளை யானையாக உருவகித்து, ' அவ்யானைகளைத் தம்தம் புலன்களின்மேல் தம் விருப்பப்படி செல்லாதவாறு, ஞானம் என்னும் அங்குசத்தால் அடக்கி ஆள்கின்றவர்களே வீடு பெறுதற்கு உரியவர்' என்கின்றார். திருஞானசம்பந்தரும் இவ்வாறே திருக்கேதாரத்தலத்தை,

" தொண்டர் அஞ்சுகளி றும்அடக் கிச்சுரும்பார்மலர்
இண்டை கட்டிவழி பாடுசெய்யும் இடம் "

என்று குறிப்பிடுகின்றார்.

" கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை "

என்னும் திருக்குறளால், ' கடவுளது திருவடிகளை வணங்குதல், வாழ்த்தல், நினைத்தல், அவன் புகழைக் கேட்டல் முதலியவைகளைச் செய்யாத மக்கட் பிறப்பினால் பயனில்லை' எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். இக்கருத்தினை,

" சிலையால் எயில்எய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே "

" ஆமாத்தூர் அம்மானைக் - காணாத கண்ணெல்லாம்
காணாத கண்களே "

" கூருத நாவெல்லாம் கூருத நாக்களே "

" கேளாச் செவியெல்லாம் கேளாச் செவிகளே "

" வள்ளல் கழல்பரவா வாழ்க்கையும் வாழ்க்கையே "

" ஆமாத்தூர்-நிச்சல் நினையாதார் நெஞ்சமும் நெஞ்சமே "

எனச் சம்பந்தரது திருவாக்கிலும் காண்கின்ருேம்.

'உலகப் பற்று நீங்குவதற்கு இறைவன் திருவடிப் பற்று வேண்டும்' என்பதைத் திருவள்ளுவர்,

" பற்றுக பற்றற்ருன் பற்றினை ; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

என்னும் திருக்குறளில் கூறியுள்ளார். இக்கருத்தே,

" முற்ரு வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்ரு நின்ருரைப் பற்ரு பாவமே "

என்ற ஞானசம்பந்தர் திருவாக்கிலும் காணப்படுகின்றது.

திருவள்ளுவர், 'அரசனது கோல் செங்கோலாய் இல்லாது கொடுங்கோலாய்விடின், பசுக்கள் பால்குன்றும்; பசுக்கள் பால் குன்றுமாயின், அந்தணர்கள் வேள்வி வேட்டல் இயலாது; வேள்வி இல்லையாயின், மழை இல்லையாய்விடும்' என்பதை,

" ஆபயன் குன்றும், அறுதொழிலோர் நூல்மறப்பர்,
காவலன் காவான் எனின் "

" முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் "

என்னும் குறள்களால் வெளியிடுகின்ருர். ஆகவே, செங்கோல் அரசனும், பாற்பசுக்களும், நூலை மறவாது ஓதி ஒழுகும் அந்தணர்களும் இனிது வாழ்தல் உலக நலத்திற்கு இன்றியமையாதது என்பது விளங்குகின்றது. எனவே,

" வாழ்க அந்தணர், வானவர், ஆனினம் ;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக "

என்று ஞானசம்பந்தர், அந்தணரையும், தேவரையும், ஆனினங்களையும், மழையையும், அரசனையும், "வாழ்க" என வாழ்த்தியது, மேற்கூறிய கருத்தினால் என்பது அறியப்படுகின்றது.

இவ்வாறு பொருள் மட்டுமன்றிச் சொற்களும் திருவள்ளுவர் நூலில் உள்ளவாறே, திருஞானசம்பந்தர் திருமுறையில் அமைந்திருத்தலை, "அகர முதலானை அணியாப்ப னூரானை" என்றவிடத்தில் காணலாம்.

இதனால் திருவள்ளுவரது பொதுமறையை ஓதி அறத்தைப் பெறுகின்றவர்கள், திருஞானசம்பந்தரது சிறப்பு மறையையும் ஓதி மெய்யுணர்வாகிய சிவஞானத்தையும் பெறுவார்களாக.

## விசேஷ நாட்கள்

### 10—10—67 முதல் 10—11—67 முடிய

| | | |
|---|---|---|
| 11—10—67 | ஏனாதி நாயனார் | திருநக்ஷத்திரம் |
| 13—10—67 | குங்குலியக்கலய நாயனார் | ,, |
| 15—10—67 | பிரதோஷம் | |
| 16—10—67 | நடேசர் அபிஷேகம் | |
| 21—10—67 | கிருத்திகை, இடங்கழி நாயனார் | ,, |
| 26—10—67 | சக்தி நாயனார் | ,, |
| 30—10—67 | பிரதோஷம் | |
| 2—11—67 | மெய்கண்டதேவர் | ,, |
| 4—11—67 | பூசலார் | ,, |
| 6—11—67 | ஐயடிகள்காடவர்கோன் | ,, |
| 7—11—67 | ஸ்கந்தஷஷ்டி; சூரசம்ஹாரம், | ,, |

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

*17—9—67ல் சிதம்பரத்தில் நிகழ்ந்த வரவேற்பு விழாவில்*

வழங்கியருளிய

# ஆசியுரை

தில்லைத் திருத்தலம், செல்வத் திருத்தலம். என்ன செல்வம்? திருவருட் செல்வம். திருவருள் நெறியாகிய சைவ சமயத்தில் உள்ளவர்களுக்குச் செல்வத்தின் இருப்பிடமாவது கோயிலே. சைவர்களுக்குக் கோயில்கள் அளவற்று இருப்பினும், அனைவர்க்கும் முதற்கோயில் தில்லையே. அதனால், தில்லைத் திருத்தலம், 'கோயில்' என்றே சொல்லப்படுகின்றது. இக்கோயிலில் வந்து காண்பவர்களுக்கு தனது அருளின் வழியாக ஆனந்தத்தை வழங்க ஆனந்த நடனத்தைச் செய்தருளுகின்றான் இறைவன். அதனால், அவன் செல்வனாய் விளங்குகின்றான். அவன் எழுந்தருளியிருக்கின்ற தலமும் செல்வத் தலமாகின்றது. அங்கு வாழ்பவர்களும் செல்வர்களே. அப்பெருமான் கழலை ஏத்தும் செல்வமே செல்வம் என்று ஞானசம்பந்தர் நன்கு அருளிச் செய்கின்றார்.

"செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே

என்பது அவ்வருள்வாக்கு,

செல்வத் திருத்தலமாகிய தில்லையில்தான் சைவர்களுக்குச் செல்வச் சேமிப்பு இருந்தது. அஃதாவது, சைவர்களுக்குச் செல்வமாய் இருப்பவை திருமுறைகள். அத்திருமுறைகள் தில்லையில் கூத்தப்பெருமான் திருக்கோயிலில் வாயு திக்கில் சேமித்து வைக்கப்பெற்றது. கோயிலில் வாயு திக்கு இலட்சுமிக்கு உரிய இடம் அல்லவா? அவ்விடத்தில்தான் சைவர்கள் செல்வம் சேமிக்கப்பட்டது. அந்தச் செல்வத்தைத் தேடி அலைந்த சிவபாதசேகரனாகிய இராசராச சோழனுக்கு அதனை எடுத்துக்

கொடுக்கச் சிறந்த ஆசாரியர் ஒருவர் கிடைத்தார். அவரே திருநாரையூரில் ஆதிசைவ அந்தணர் குலத்தில் அவதரித்துப் பொல்லாப் பிள்ளையாரது திருவருளை நிரம்பப்பெற்ற நம்பி யாண்டார் நம்பிகள். அவ்வாசாரியர் இராசராச சோழனுக்கு எடுத்தளித்த தேவாரத் திருமுறையே இன்று உலகெங்கும் வழங்கி வருகின்றது. எனவே, உலகிற்குத் திருவருட் செல் வத்தை வழங்கும் திருத்தலம் தில்லையே என்பது தெளிவா கின்றது.

செல்வம் உள்ளவர்கட்குக் கவலை இல்லை. உண்மைச் செல்வம், முன்சொன்ன செல்வன் கழல்தான். அந்தச் செல்வத் தைப் பெற்ற செல்வர்களுக்குத்தான் உண்மையில் கவலை இல்லை. அதைத்தான் திருவள்ளுவர்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்று கூறினர். நமக்குக் கவலையைத் தருவன, 'யான், எனது' என்னும் பற்றுக்கள். இப்பற்றுக்கள் நீங்கவேண்டுமானல், பற்றற்றான் பற்றினைப் பற்றவேண்டும். அப்பொழுதுதான் மனக்கவலை நீங்கும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றார் திருவள்ளுவர். ஞானசம்பந்தர் இத்தில்லையில் எழுந் தருளி இறைவனைத் தரிசித்துப் பாடிய திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டிலே,

"கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே"

என்று அருளிச் செய்தார். தில்லைப் பெருமானுக்குத் தொண்டு செய்பவர்களுக்கு அல்லல் இல்லை; அருவினை இல்லை என்பதை நாவுக்கரசர்,

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே"

என்று அருளிச்செய்கின்றார். அல்லல் அற்று, அருவினை யற்றுக் கவலையின்றி வாழ்வதற்குத் தில்லைக்கூத்தன் சேவடியிருக்க, அதனைத்தொழாமல் அல்லற்பட்டுக்கொண்டிருத்தல், மக்களுக்கு மாண்புடைய செயலாகுமா? ஆகாது என்பதைத் திருவள்ளுவரே,

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"[1]

என்று கூறியுள்ளார், மணிவாசகரும்

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"

என்று அருளிச்செய்தார். வணங்குதற்குத் தலை இருக்கின்றது; வாழ்த்துதற்கு வாய் இருக்கின்றது; அவைகளைக் கொண்டு தில்லைக் கூத்தன் திருவடிகளை வணங்கி இன்புற்று வாழ்வதே மக்கட் பிறப்பின் பயன்.

"கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யான்உளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே"

என்ற அப்பர் வாக்கை நோக்குதல் வேண்டும். இதனுடன் அவர் நமது துன்பங்களை எல்லாம் வெல்வதற்கு அஞ்செழுத்தாகிய படைக்கலம் உண்டு என்கின்றார். சிவபெருமானிடத்தில் அடைக்கலம் புகுந்து அவனையே பற்றியிருப்பவர்க்குக் கிடைப்பது அந்தப் படைக்கலம். அவர்கட்கு உள்ள கவசம் அவன் திருநீறு. இவைகளால் தாம் சிற்றம்பலத்து அரனை அடைந்து அவனிடத்து நீங்காது நின்றமையை அவர்,

"படைக்கல மாகஉன் நாமத் தெழுத்தஞ்சு
என் நாவிற்கொண்டேன்;
இடைக்கல மல்லேன்; எழுபிறப்பும் உனக்கு
ஆட் செய்கின்றேன்

துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
தூ நீறணிந்து உன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம்பலத்தரனே ''

என்று கூறுவதைப் பார்க்கின்றோம். ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின் '' என்று அவர் அறிவுறுத்துவதை நாம் மறவாது மனத்துக்கொள்ளல் வேண்டும்.

நீங்கள் யாவரும் அங்ஙனம் கொண்டு சிற்றம்பலமேய செல்வன் கழல் ஏத்தி வாழும் செல்வர்கள்தாம். அதனுல்தான் ஆசாரிய பக்தியுடையவர்களாய், ''குருவே சிவமெனக் கூறினன் நந்தி'' என்ற திருமூலர் திருவாக்கின்படி குருதரிசனத்தில் ஆர்வம் கொண்டு இவ்விழாவை அமைத்துள்ளீர்கள். நீங்கள் செய்யும் இச்சிறப்புக்களெல்லாம் எங்கள் ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தருக்குச் செய்யும் சிறப்பு; எங்கள் செந்தமிழ்ச் சொக்கனுக்குச் செய்யும் சிறப்பு; தில்லைக் கூத்தப் பெருமானுக்குச் செய்யும் சிறப்பு; சைவத்திற்குச் செய்யும் சிறப்பு. உங்கட்கு எங்கள் ஆதி பாமாசாரியர் அருளும். ஆலவாய்ச் சொக்கன் அருளும் என்றும் துணை நின்று நல்லன பலவும் நல்கும். குருவருளாலும் திருவருளாலும் நீங்கள் அனைவரும் எல்லா நலங்களையும் இனிது எய்தி நீடு வாழ்க. சைவம் தழைக்க. தமிழ் வளர்க.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.


We a group of 16 persons of the employees of THE METAL BOX CO., OF INDIA LIMITED, MADRAS, 21 came to this temple on 1—10—1967 morning on a pilgrimage. We were cordially received and shown around all the deities. We were much impressed by the cleanliness of the temple and also the cordial reception given to us. The serene atmosphere maintained in the temple gave us solace and we forgot our day to day worries.

1—10—67.

(Sd.) N. H. Krishnan,
Leader of the Party.

தருமையாதீனம்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் மகாகும்பாபிஷேக விழாவில் (17–3–1952)




தருமை, துறைசை, மதுரை ஆதீன மகாசந்நிதானங்களும் அன்பர்களும்.

தருமையாதீனம்
சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் மகாகும்பாபிஷேக விழாவில்



அடியவர் திருக்கூட்டத்துடன் தருமை, துறைசை. மதுரை ஆதீன மகாசந்நிதானங்கள் வீற்றிருந்தருளிய காட்சி.

தில்லையில் அளித்த வரவேற்பின் போது



கலந்துகொண்ட மக்கள் கூட்டத்தின் நடுவே
ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள்

தில்லை நடராசப்பெருமான் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில்
நிகழ்ந்த வரவேற்பின்போது




சிதம்பரம் டாக்டர் திரு. K. அரங்கசாமிப்பிள்ளை M. B. B. S. அவர்கள்
வரவேற்புரை யாற்றுதல்.

தில்லையில்

# ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கட்கு

## சைவப் பெருமக்கள் நிகழ்த்திய

# பாராட்டு விழா

"சிவனடியான்"

*17—9—'67* ஞாயிற்றுக்கிழமை; சிதம்பரம் கனகசபை நகரில், புதிதாகக் கட்டப்பெற்றுள்ள தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம்; மாலை மணி 3 முதலே சைவப் பெருமக்கள் கூட்டம் திரண்டு வழிகின்றது. சிதம்பரம் அன்பர்கள், மாயூரம், திருச்சி, தஞ்சையிலிருந்தெல்லாம் வந்த சிவநேசச் செல்வர்கள் திரண்டிருக்கின்றார்கள். திருநீறும், உருத்திராக்கமும் அணிந்த அன்பர் குழுவின் ஆர்வம் கட்டுக்கடங்காமல் உள்ளது. முகத்திலே எல்லையற்ற மகிழ்ச்சியும் பரபரப்பும் தேங்க அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள். சிவசின்னங்களின் விளக்கம்; பெருமகிழ்ச்சியின் தேக்கம். தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களை தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவராக இரண்டாம் முறையும் ஒருமனமாகத் தேர்ந்ததுகுறித்து வாழ்த்தி வரவேற்று வணங்க அவர்கள் துடிப்புடன் நிற்கின்றார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் ஏறிவந்த உந்தூர்தி திருமடத்தின் முன் வந்து மெல்ல நிற்கின்றது. அன்பர் கூட்டம் அளவற்ற பக்தி பரவசத்துடன் வாழ்த்தி வரவேற்று நிற்கின்றது; வரவேற்று உள்ளே அழைத்துச் செல்கின்றது.

அழகாக அலங்காரம் செய்யப்பெற்ற மணித்தவிசில் குருமாமணியவர்களை எழுந்தருள்வித்துக் கொலு - வழிபாடு செய்கின்றார்கள். ஞான தேசிகரை ஞானபீடத்தே அமர்த்தி அத் திருமேனி காண்டலும் தெளிவு என்று கூறிய திருமூலரது திருவாக்குக்கு அங்கே விளக்கம் நிகழ்கின்றது. சிவசின்னங்கள் முழங்குகின்றன; மங்கள வாத்தியங்கள் ஒலிக்கின்றன. எங்கும் தேசிகப் பெருமான் திருவருள் பெற்ற இன்பம் பளிச்சிடுகின்றது; ஒளிவிடுகின்றது.

திரள்திரளாக மக்கள் வந்து கூடியவண்ணம் இருக்கின்ருர்கள்; சிதம்பரம் டாக்டர் திரு. K. அரங்கசாமிப் பிள்ளை அவர்களும், திரு. R. கனகசபைப் பிள்ளை அவர்களும், காட்டுமன்னுர்குடி திரு. M. இராமலிங்கம் பிள்ளை அவர்களும், பிற அன்பர்களை யெல்லாம் கைகூப்பி 'வருக! வருக!!' என்று வரவேற்கின்ருர்கள்; அவர்களது மலர்ந்த முகங்களும், இனிய சொல்லும் வருவோர்க்கு வரவேற்புத் தருவதுடன் இன்பத்தையும் ஊட்டின. விருந்து ஓம்புவது என்ருல் எப்படி என்று திருக்குறளில் காணும் கருத்துக்களுக்கு விளக்கத்தை அங்கே காண முடிகின்றது.

இரவு மணி 7க்கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு அன்பர்கள் புடைசூழ, மங்கள வாத்தியங்கள் முழங்க எழுந்தருளினுர்கள். நாற்காலிச் சிவிகையில் வரிசை வரிசையான விளக்குகளின் குளிர்ந்த ஒளியில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் எழுந்தருளியிருந்த திருக்காட்சி ஞான ஒளி வீசும் நற்காட்சியாக இருந்தது.

சிவநாம முழக்கம் செய்து, சிவபுராண பாராயணம் புரிந்து மருங்கெலாம் சிவம் பெருக்கி மகிழ்வித்துக்கொண்டேவந்தார்கள் ஆதீனத் திருமுறைப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், ஏனைய திருமுறை வாணர்களும். சிதம்பரம் நகரத்தில் இதுவரை கண்டிராத அளவுக்கு, தெய்வநெறிச் சிவம்பெருக்கும் தெளிவுடை அன்பர்கள் இரண்டு இருபுடையும் வந்த காட்சி, சமயாசாரியர்கள் சிதம்பரம் போந்த காலத்து இப்படித்தான் இருந்திருக்கும் என்று கற்பனைக்கண்கொண்டு காணச்செய்தது.

'நம் குருமணியை இவ்வாறு வழிபட்டு இன்புற நாம் பெற்ற பேறுதான் என்னே' என்ற பெருமகிழ்வு, அடுத்தது காட்டும் பளிங்கு போன்ற ஒவ்வொருவர் முகத்தும் ஒளிர்ந்தது.

திருவீதியின் வழியே சிவிகை வருங்கால், கும்பிட்டும், தொழுதும், பூர்ணகும்பம் வைத்து வழிபட்டும் பக்திபரவசத்தில் ஆழ்ந்து நின்ருர் பலர்.

ஸ்ரீ ஆனந்த நடராசப் பெருமான் திருக்கோயில் கீழ் வாயிலின் எல்லையில் திருஐந்தெழுத்து சிவிகையினின்று ஓதி இழிந்தார்கள். வெள்ளம்போன்ற அன்பர்கட்கு இடையே

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் செவ்வொளி பரப்பி கடந்துவந்த காட்சி, வானிடை விண்மீன் கூட்டத்திடையே வரும் முழுமதி போன்று இருந்தது. கவி மனம் படைத்தவர்க்கு, இக்காட்சி, பாசிலை பல பரப்பும் பொய்கையிடையே எழுந்து மலரும் செந்தாமரையை நினைப்பித்தது.

பொன்னம்பலத்தாடும் புனிதன் திருமுன் கண்மூடிக் கரங் குவித்து வழிபட்டார்கள் குருநாதர் அவர்கள். தமிழ்ப் பனுவலாய், வாடா மலராய், என்றுமுள தென்றமிழில் இலங்கும் 'தில்லைவனம்' என்னும் பெயரில், திருவடிக் காணிக்கையாக அவர்கள் வெளியிட்ட நூல் கூத்தப்பிரான் திருவடியில் சமர்ப்பிக்கப் பெற்றது. பொன்னுடை சார்த்திப் பொன்னம்பலவனைப் போற்றிய ஸ்ரீலஸ்ரீ குருமுதல்வர் அவர்கள், சிவகாமித்தாய் சேவடியையும் சிந்தித்து மகிழ்ந்தார்கள். அன்று ஆதி ஸ்ரீ குரு ஞானசம்பந்தர்க்கு பால் பாயசமும் திருவமுதும் தந்தருளி அருள்பாலித்தவளல்லவோ அன்னை சிவகாமி! இன்று 25ஆவது குருஞானசம்பந்த ஞானக் குழவியையும் கடைக்கண் சார்த்தி, 'திருக்குறிப்பு' அருளியிருப்பாள் என்று கூறுவதற்கு என்ன தடை? 'என்று வந்தாய்' என்று அப்பரடிகளைக் கேட்டான் அன்று அம்பலவன். அப்பரடிகளைப் போன்றே கயிலைக் காட்சி கண்டு களித்த இந்தப் பெருமுனிவர்க்கும் பெருமான் அருளிய திருக்குறிப்பு எல்லோராலும் அறிய இயலுமோ? 'கண்ணப்பருக்கும் காளத்தியார்க்கும் இருந்த அன்பின் பெற்றியைக் கண்ணப்பனும் காளத்தியாரும் அறிதல் அல்லது வேறு ஆரறிவார்' என்று கூறும் சாத்திரப் பகுதியே இவ்விடத்து நினைவுக்கு வந்தது.

வழிபாடு முடிந்ததும் ஆயிரக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளினார்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள். அம்பலக் கூத்தன் அடிமலர் ஏத்திய பனசைப் பெருமுனிவர், அறக்கட்டளை அரசர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகளும், இளவரசு வித்துவான் ஸ்ரீல ஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகளும் எழுந்தருளினார்கள். இராஜ சபை, அன்று தவராஜசபையாகவே திகழ்ந்தது. தவநெறி பரப்பும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி யவர்களைத் 'தவச்சக்கரவர்த்தி' என்று பின்னர் பேசி வரவேற்ற டாக்டர், திரு. K. அரங்கசாமிப் பிள்ளை அவர்களும் குறிப்பிட்டதால்.

அவர்கட்கும் இந்தக் கருத்துத் தோன்றியிருக்க வேண்டும் என்று புலனாயிற்று.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்குப் பலரும் இனிய பாட்டுக்களால் அமைந்த வரவேற்புரைகள் பலவற்றை வாசித்துச் சமர்ப்பித்தார்கள். முதற்கண், தில்லைத் தீட்சிதர்கள் சார்பில் திரு. நடராசதீட்சிதர் அவர்கள் ஓர் இனிய கீதத்துடன் வரவேற்புப்பா வாசித்தளித்தார். பின்பு முறையே அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைத் துறைத் தலைவர், தருமையாதீன இசைப்புலவர், இசையரசு, உயர்திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் விழாக் குழுவின் சார்பில் 'ஏகாதசமாலை' ஒன்றை வாசித்தளித்தார். சென்னைமாநில அறநிலையங்களின் முன்னாள் ஆணையர் உயர்திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கட்கு, சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத் திருமுறை ஆசிரியர், சங்கீத பூஷணம், திரு. P. சுவாமிநாதன் அவர்களும், சென்னைமாநில அறநிலையங்களின் இந்நாள் ஆணையர் உயர்திரு. இராதாகிருஷ்ணன் அவர்கட்கு, சங்கீத பூஷணம், திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் வாசித்தளித்தனர். மற்றும் ஸ்ரீ ஐயப்பன் பக்த ஜன சபை, முதலிய பல நிறுவனங்களின் சார்பிலும் தனித்தனி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கட்கு வரவேற்புப் பாமாலைகள் வாசித்தளித்தார்கள்.

விழாக் குழுவின் சார்பில், சிதம்பரம் டாக்டர், திரு. K. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள், தலைமை வகித்த திரு, கல்யாணசாமி தீட்சிதர் அவர்களையும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களையும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களையும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களையும், அறநிலையங்களின் முன்னாள், இந்நாள் ஆணையரவர்களையும், மதுரை திரு. P. T. இராஜன் அவர்களையும் திரு. V. K. C. நடராஜன் அவர்கள் முதலிய பாராட்டுரையாளர்களையும் அவையோரையும் வரவேற்றுப் பேசினார்கள்.

திரு. K. R. பிள்ளையவர்கள் தம் வரவேற்புரையில் பின் வரும் அரிய பல கருத்துக்களை வெளியிட்டு மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள் :

"சிதம்பரம் பழமையும் பெருமையும் கூடிய தெய்வத் தலம். கோயில் என்ற பெயரால் கூறப்படும் அருந்தலம். இத் தலத்தில் அன்பர் பலரின் நெடுநாளைய விருப்பத்தை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் விண்ணப்பித்துக்கொண்டோம். தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் தலைவராக இரண்டாம் முறையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தவச்சக்கரவர்த்தியாகவே விளங்கிவருபவர்கள். அவர்கள் நம் வேண்டுகோளை ஏற்று இங்கே எழுந்தருளியது நம் பாக்கியம். இவ்விழாவில் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும், இளவரசு சுவாமிகள் அவர்களும் வந்து திருக்காட்சி வழங்குவது நம் மகிழ்ச்சிக்குரியது. வெளி மாவட்டங்களிலிருந்தெல்லாம் அன்பர்கள் பலர் திரண்டுவந் திருக்கின்றார்கள்; கோயிலே திருவிழாக் கோலம் பூண்டு விளங்குகின்றது. பாராட்டுரை வழங்க மதுரை, பாண்டிச்சேரி, சென்னையிலிருந்தும், பல பிரமுகர்கள் வந்துள்ளார்கள். எல்லோரையும் வருக வருக என்று மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்".

வரவேற்புரை கூறுவதற்குமுன், வரவேற்பு வாழ்த்திதழ்களைப் படித்த ஒவ்வொருவர்க்கும் அவ்வப்பொழுதே திரு. பிள்ளையவர்கள் பொன்னுடை போர்த்தினார்கள். வரவேற்புரையின் பொழுது, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கும், திருப்பனந்தாள் சுவாமிகளுக்கும், தலைமையேற்ற தீட்சிதர் அவர்களுக்கும் பொன்னுடைகள் போர்த்தினார்கள்.

தலைவர் திரு. கல்யாணசாமி தீட்சிதர் அவர்கள் தம் முன்னுரையில், சிதம்பரம் தலம் சிறப்புடையதென்றும், பதஞ்சலி வியாக்கிரபாதர் ஸ்ரீ நடராஜ தரிசனம் செய்தருளிய தென்றும் கூறி, இங்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பாராட்டு நடப்பது மிகப் பொருத்தமானதென்றும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும் செய்து வரும் சேவை அளவிறந்ததென்றும் கூறிப் பாராட்டினார்கள்.

பின்பு திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பேசினார்கள்:

"ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக் கயிலாய பரம்பரையை உண்மையிலேயே கயிலாய யாத்திரையும் தரிசனமும் செய்து விளக்கியவர்கள். அவர்கள் தமிழ்

நாடு தெய்விகப் பேரவையின் தலைவராக இரண்டாவது முறை யாகவும் வந்திருப்பது பெருமகிழ்ச்சி தரக்கூடியது. அவர்கள் பெருங்கருணை படைத்தவர்கள்; தமிழ்ப் பண்ணையாகிய தருமை யிலிருந்து திருவண்ணாமலை யாதீனத்திற்கு ஒரு மலையை அருளி னார்கள்; திருப்பனந்தாளுக்கு ஒரு முத்தை அருளினார்கள். ஞான பரம்பரை வளர்தலிலும், ஓங்குவதிலும் பெருநாட்டம் உடையவர்கள்.

குமரகுருபர அடிகள் தருமையாதீனத்தில் நான்காவது குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்றார்கள். சிதம்பரத்தில் அவர்கள் ஆனந்தக் கூத்தன் அடிமலர்களைத் தொழுது 'சிதம் பரச் செய்யுட் கோவை' பாடியருளினார்கள்.

ஸ்ரீ குருஞானசம்பந்த மூர்த்திகளுக்கு ஸ்ரீ சிவகாமியன்னை இதே ஆயிரக்கால் மண்டபத்தில் திருவமுதளித்தார்கள் என்று அறிகின்றோம்.

இங்குப் பொன்னம்பலம் திருவைந்தெழுத்து எழுதப்பெற்ற பொன்னோடுகள் வேய்ந்த சிறப்புடையது. பெருமானுடைய அருளாடலில் ஐந்தெழுத்து விளங்குகின்றது. இறைவனின் திருவடி மலர்களை ஒட்டியபடி 'பஞ்சாக்கரப்படி' என்று கூறப் பெறும் மாண்புடையது.

சமயாசாரியர்கள் வழிபட்ட பெருஞ்சிறப்பு உடைய இத் தில்லைத் திருத்தலத்தே, எங்கள் பரமாசாரிய மூர்த்திகட்கு எடுக்கும் பாராட்டு மிகப்பொருத்தமானது; மகிழ்ச்சிக்குரியது."

தீட்சிதர் வீடுகட்டும் திருப்பணிக்காக ரூ. 5000/- தொகை யைத் தம் பேச்சு முடிவில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் வழங்கினார்கள். தில்லைவாழந்தணர்கள் சிறப்பை எடுத்துக் கூறி அவர்கட்கு அளிக்கப்பெறும் சிறப்பு பெருமான் திருவுள்ளத் திற்குப் பெரிதும் உகந்ததாக இருக்கும் என்று உரைத்தருளி னார்கள்.

அடுத்த மதுரை திரு. பி டி ராஜன் அவர்கள் பேசினார்கள்; மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிற் கும்பாபிஷேகத் தைத் தாம் முடிக்கத் திருவருள் துணை புரிந்ததை எடுத்துக்கூறி, அந்தத் திருவருள் துணையின்றேல் எதுவும் நிகழவியலாது என்று

குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் பணிகளை மனமாரப் பாராட்டினார்கள். பொன்னம்பலத்துக்கும் வெள்ளியம்பலத்துக்கும் உள்ள தொடர்புகளை விவரித்துக்கூறி, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கு இங்குப்பாராட்டெடுப்பது எவ்விதத்திலும் பொருத்தமாக இருக்கும் என்றார்கள்.

இந்து சமய அறநிலையங்களின் முன்னாள் ஆணையர் உயர்திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் அடுத்துப் பேசினார்கள்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவராக இருக்கக்கூடிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய உதவியாளராக - துணைத் தலைவராக இருந்து பணி செய்யத்தக்க பெரும்பேற்றிற்குத் தாம் பெருமகிழ்ச்சி அடைவதாகவும், இப்பேரவையின் மூலம் தமிழ்நாட்டுத் திருமடத்துத் தலைவர்களெல்லாம் இந்து சமயத்தின் உறுதிக்கும் புதுப்பணிகளுக்கும் மிக்க தொண்டுகள் செய்ய வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகவும், எல்லோரது ஒத்துழைப்பாலும் தாம் பணியாற்ற முடிந்ததாகவும் கூறி, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கு எடுக்கும் இப் பாராட்டு விழாவில் தாம் கலந்துகொண்டு திருவருட்குப் பாத்திரராவது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் பேசி முடித்தார்கள்.

இந்து சமய அறநிலையங்களின் இந்நாள் ஆணையர் உயர்திரு. இராதாகிருஷ்ணன் அவர்களுடைய பேச்சு அடுத்து அமைந்தது. அடக்கமும் எளிமையும் இன்முகமும் கொண்ட ஆணையாளர் அவர்கள். தாம் இந்தப் பாராட்டில் கலந்து கொள்வதில் அளவற்ற இன்பம் கொள்வதாகவும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும் செய்துவரும் எண்ணற்ற பணிகளை அறிந்து மகிழ்வதாகவும் இப்புதிய பேரவையின் தெய்விகப் பணிகள் தமிழ்கூறு நல் உலகம் முழுதும் செழிக்கும் என்று நம்புவதாகவும் கூறினார்கள்.

ஆணையராகப் பதவியேற்ற பின் தில்லையிலே நிகழ்ந்த அவர்களுடைய முதற்பேச்சு, தில்லைவாழந்தணர் முதலிய எல்லா அன்பர்களுக்கும், மகிழ்ச்சி ஊட்டுவதாகவும், அறநிலையத் துறையின் புதிய பணிகளின் செம்மையை விளக்குவதாகவும் அமைந்திருந்தது.

காலஞ்சென்ற தமிழறிஞர், பாஸ்கரத் தொண்டமான் அவர்களின் மருகரான திரு. வி. கே. சி. நடராசன் அவர்களது பேச்சு அடுத்து அமைந்தது. அவர்கள் பேசும்போது வெளியிட்ட கருத்துக்களில் சில :

"சமயத் தலைவர்கள் நாட்டை வாழ்விப்பவர்கள். அவர்கள் வாழ்ந்தால்தான் நாடு நலம்பெறும். நாட்டின் வளமும் வனப்பும், நீர் வளமும் நிலவளமும் முதலிய எல்லாம் சமயத் தலைவர்களாக இருப்பவர்களது ஞான ஒளியினால்தான் உண்டாகும்; காப்பாற்றப்பெறும். தருமையாதீனம் சமயத் தலைவராக எழுந்தருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தரால் நிறுவப்பெற்ற அருட் பூமி. இதில் 25 ஆவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கட்கு எடுக்கும் இப்பாராட்டு விழா மிகப் பொருத்தமானது. இவர்களது அருளாற்றலை நான் நன்கு உணர்வேன். இமயப் பெருந்தலங்களில் எல்லாம் இவர்கள் யாத்திரை செய்த பெருஞ்சிறப்புடையவர்கள். இவர்களது, அருளாசியின் மேன்மையை நான் உணரவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

நான் பல ஆண்டுகளுக்கு முன் கன்யாகுமரியில் கலெக்டராக இருந்தசமயம்; மாணவர் கிளர்ச்சிசெய்த சமயம், மாணவர் கிளர்ச்சியின்போது ஒரு மாணவர் போலீசாரது அடிபட்டுக் கவலைக்கிடமான நிலையில் இருந்தார். என்னுள்ளத்தில் கவலை பற்றிக்கொண்டது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை நான் ஒருமுறை தரிசித்தேன் அப்போது அவர்கள் அளித்த அபிராமி அந்தாதி என்ற சிறு நூல் - அருள் நூலே எனக்குத் துணை நின்றது. அதை ஒரு முறை பாராயணம் செய்தேன், நம்பிக்கை ஒளி பிறந்தது. என்ன வியப்பு! மாணவர் நிலை மாறிற்று. நலம் பெற்றார். கிளர்ச்சியில் ஒரு பெரிய சிக்கலை இச்சம்பவம் நீக்கிற்று. இதற்குக் காரணம் இவர்களது அருளாசியும், அதன்வழி நான் பெற்ற ஞான உபதேசமாகிய அபிராமி அந்தாதியுமே என்பதை இன்று நினைக்கும்போதும் என் மெய் சிலிர்க்கின்றது. இத்தகு சமயத்தலைவர்களைப் போற்றுதலும், உபதேசம் பெறுதலும் நம் கடன். இவர்கள் நீடு வாழ்ந்து நிலவுலக நன்மைக்கு அரும்பணிகள் செய்தல்வேண்டும்.

சென்னை, திருமதி சௌந்தரம் கைலாசம் அம்மையாரவர்கள் தமக்கே உரிய இனிய - அழகு ஒழுகும் தமிழில் அடுத்து விரிவுரை செய்து பாராட்டினார்கள் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இந்த நூற்றாண்டின் அவதார புருஷர் என்று கூறத்தக்கவர்கள். ஸ்ரீ அபிராமியிடத்தும், ஸ்ரீ துர்க்காதேவியிடத்தும் பக்தி உடையவர்கள். அவர்கள் ஞானபீடம் ஏறிப் புரிந்து வரும் அளப்பரும் பணிகளைத் தமிழகம் வியந்து பாராட்டுகின்றது என்றால் அது மிகையாகாது. அவ்வருஞ்சிறப்பைக் கருதியே தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவராக அவர்களையே இரண்டாவது முறையாகவும் ஆதீனத் தலைவர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

நிலையாத உலகத்தில் நாம் நிலைத்த பொருளை அறிந்து பற்றிக்கொள்ளுதல் வேண்டும். அதனை அருள் ஒன்றே கூட்டுவிக்கும். 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்பது திருவாசகம். அவனை வணங்கவும் அவன் அருளே வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுறைகட்கு உரையெழுதி வெளியிட்டு வருகின்றார்கள். இஃது ஓர் அரும் பணி. பன்னிரு திருமுறைகட்கும், திவ்வியப் பிரபந்தத்திற்கு இருக்கும் வியாக்கியானங்கள்போலப் பல பேருரைகள் வெளிவருதல் வேண்டும் என்பது அவர்கள் திருவுள்ளம். அவர்கள் சைவ சித்தாந்த மெய்கண்ட சாத்திரங்களையும் தக்க உரைநடையுடன் வெளியிட்டுள்ளார்கள்.

இமாலயப் பெருந்தலங்களையெல்லாம் தரிசித்தவர்கள். கயிலாயமலையைக் கண்டு, அப்பன் அருளை அயராமற்பெற்றவர்கள். அவர்கள் ஞானபீடம் ஏறி இருபத்தைந்தாண்டுகள் ஆகப்போகின்றன. அடுத்து வரும் ஆண்டுகளில் அவர்கள் ஞானபீடம் ஏறிய இருபத்தைந்தாவது ஆண்டை - வெள்ளி விழாவைத் தமிழகமே கொண்டாடவேண்டும். ஆங்காங்கும் விழா எடுத்துப் பயன்பெறவேண்டும். அதற்கு ஒரு முன்னோடியாகவே இப்பாராட்டுவிழா தில்லையிலே நிகழ்கின்றது என்று கூறலாம்.

அன்னை சிவகாமி, ஆதிகுருஞானசம்பந்தர்க்கு வெள்ளிக் கிண்ணத்தில் பால் பாயசமும் திருவமுதும் கொடுத்த அருங்

கருணை உடையவள். அவ்வாறே இவர்கள் இன்று அம்மையின் அருளையும், அம்பலக்கூத்தன் அருளையும் தேக்கி இங்கே எழுந்தருளியிருக்கின்றார்கள்.

சைவமும் தமிழும்போல், கவியும் சுவையும்போல் இவர்கள் நீடுவாழ்க. இவர்களது திருவடிகளைப் போற்றி உலகு பயன் பெறுவதாக.

பாண்டிச்சேரி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் திரு. பரமகுரு அவர்கள் பேசினார்கள் :

"ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்களுடன் பல்லாண்டுகள் தொடர்பு கொண்டவன் நான். அவர்கள் நூல் வழியாகவும், திருக்கோயில் பணிகள் வாயிலாகவும், பல மகாநாடுகள் வழியாகவும் சமயப்பணி புரிந்து வருகின்றார்கள். அன்பர்கள் பலரொடும் பழகி அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி வாழ்வைச் செம்மைப்படுத்துகின்றார்கள். அவர்கட்கு எடுக்கும் விழா சிறப்புடையது. அவர்கள் தெய்விகப்பேரவைக்கு இரண்டாம் முறையும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றதானது போற்றத் தக்கது. சமயத்தின் தலைமையில் இருப்பவர்களது பணிகளைப் போற்றிப் பாராட்டெடுப்பதால் நாம் நம்மையே பாராட்டிக் கொள்கின்றோம்" என்றுகூறி அழகுறப் பேசினார்கள்.

பாராட்டுரைகளின்பின் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் அருளுரை வழங்கினார்கள் : (அருளுரையின் விரிவு முன்னர் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது) கீழ்வரும் குறிப்புகளை அவர்கள் அருளுரையில் விளக்கி அருளினார்கள்.

''தில்லை வாழந்தணர்கள் இறைவனாலேயே எடுத்துப் புகழப் பெற்ற பெருஞ்சிறப்புடையவர்கள். அவர்கள் இடையிலே அன்பர் திரு அரங்கசாமிப் பிள்ளையவர்களது தீவிர அன்பு இந்த விழாவினை ஏற்பாடு செய்துள்ளது. திரு. பிள்ளை அவர்கள் அன்பே வடிவானவர்கள். குருபக்திக்கு இலக்கியமாக விளங்குபவர்கள். அவர்களும் காட்டுமன்னார்குடி திரு. எம். இராமலிங்கம் பிள்ளை அவர்களும் தங்கள் அன்பு சிறக்கப் பல பணிகள் செய்து வருபவர்கள்.

'ஆலம் தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்' என்ற பாடல் இங்கே சிந்திக்கத்தக்கது. வெள்ளியம்பலமும் பொன்னம்

பலமும் ஒன்ருகப் போற்றத்தக்க உயர்பெருந்தலங்கள். இங்கே அருளாடல் இல்லையாஞல் உலகம் ஏது? இந்த அருள் விளையாட்டாலேயே ஐந்தொழில்கள் நிகழ்த்துகிருன் இறைவன். பஞ்சகிருத்திய நடனம் என்று கூறுகின்றது இதனையே. அவன் ஆடலின் தத்துவத்தைச் சைவ சித்தாந்த சாத்திரங்களைத் தவிர வேறு நூல் எதுவும் இவ்வளவு அழகுறக் கூறவில்லை.

இன்று நடைபெற்ற இவ்விழா எல்லாம்வல்ல திருவருளால் நிகழ்ந்த விழா. அவன் அருளாலே என்ற பகுதியை அம்மையார் நினைவுபடுத்திஞர்கள். திருவருள் நம்மை வரவழைக்கின்றது, வாழ்த்துகின்றது; செய்த பணிகளுக்குப் பாராட்டு, செய்யவிருக்கும் பெரும் பணிகளுக்கும் இறைவன் உள்நின்றும் புறம்நின்றும் உணர்த்தும் பெருங்கருணைப் பாராட்டு இது.

செந்தமிழ்ச் சொக்கனும், ஆனந்தக்கூத்தனும் இயக்க இயங்கும் நமக்கு எல்லாம் அப்பெருங்கருணை விளையாட்டே. வாழ்க உலகம். வாழ்க சைவநெறி. பங்கு பற்றிய அன்பர் அனைவர்க்கும் நல்லன எல்லாம் பெருகுக என்று கூறி வாழ்த்துகின்ருேம்''

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளுரைக்குப் பிறகு திரு. நடராசப் பிள்ளை தம் நன்றியைத் தெரிவித்தார்கள்.

இரவு 12-மணிக்கு விழா முடிந்தது. யாருக்கும் நேரம் கடந்துபோன நினைப்பே இல்லை, அவ்வளவு நேரமும் திருவருட் செல்வர்களது அருள் திறத்திலேயே ஆழ்ந்து கிடந்தது அன்பர் கூட்டம். திருமுறை வாழ்த்து ஆயிரக்கால் மண்டபத்திலே எழுந்து முழங்கியதுதான் 'நிகழ்ந்தது கூட்டம்' என்ற நினைவு தோன்றிற்று. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் டாக்டர் திரு. K. அரங்கசாமிப் பிள்ளை. திரு. எம். இராமலிங்கம் பிள்ளை ஆகியோரைச் சிறப்பித்துப் பாராட்டிஞர்கள்.

விழா முடிந்ததும், ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கள் தருமைக்கு எழுந்தருளிஞர்கள். தில்லையிலே நிகழ்ந்த இத்திருவிழா தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களது எண்ணற்ற பணிகட்கு ஓர் அன்பு விளக்கமாக இருந்தது என்று கூறலாம்.

உ
குருபாதம்

## தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் தலைவராக இரண்டாம் முறையும் தேர்ந்தெடுக்கப் பெற்றதைப் பாராட்டி

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25-ஆவது
குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அவர்கட்கு

## சிதம்பரம் நகரப் பெருமக்கள் பணிவுடன் சமர்ப்பித்த

# ஏகாதச மாலை*

தருமையெனு மாதீனத் தவநெறிக்கு
வித்தாகித் தழைக்கும் வாய்மைப்
பெருமையினய், ஐயைந்தாங் குருஞான
சம்பந்தப் பெரியோ னகும்
ஒருமையினய், எம்முளத்தே ஒருவாதே
திருக்காட்சி உவந்து நிற்பாய்
கருமையுறுங் கண்டத்தை மறைத்தாசா
னய்வந்த கயிலைத் தேவே. (1)

அந்நாளில் நாயன்மார் அவதரித்துச்
சைவநெறி அறத்தைப் பேணி
முன்னகச் செய்ததுபோல், முத்தமிழார்
இந்நாட்டில் முனைந்து நின்றே
நன்னமத் திருமடங்கள் இயக்கமெனப்
பணிபுரிந்து நயந்து போற்றத்
தென்னட்டுத் தெய்விகப்பே ரவையெனவே
இந்நாளில் நிகழ்தல் உண்மை. (2)

பணிபெருக்குந் தமிழகத்துத் தெய்விகப்
பேரவைக்குப் பாங்கி னேடே
அணிபெருக்கும் ஆசான் நீ அருநுட்பம்
பலதோற்றி ஆற்றி நின்ற

மணியனைய பணிகண்டே மறுமுறையும்
திருத்தலைமை மன்ன வைத்தார் ;
துணிவுறுநற் றெண்டுபல துலக்கமுறச்
செய்தருளும் துணைத்தாள் போற்றி. (3)

அருளரசை யேற்றருளு நாள்முதலாய்
நீபுரியும் அருள றங்கள்
மருளுலகைத் தெளிவிக்கும் ; மன்னியசீர்ப்
பனுவல்பல மணக்க வீந்தே
தெருளளிப்போய், மூவொன்பான் திருக்கோயில்
நல்லாட்சி திகழச் செய்தே
இருளறுக்கும் எந்தாய்நின் இருபாதப்
போதுகளை ஏத்தல் செய்வோம். (4)

பூத்திருக்கும் ஞானவொளி பொலிந்திருக்கும்
அறிவுநலம் புவியோர் போற்ற
மூத்திருக்கும் வாய்மைநலம் முளைத்திருக்கும்
கொடைவண்மை முழுதும் வாரிக்
காத்திருக்கும் பண்பினர்க்குக் கனிந்தளிக்கும்
நன்னெஞ்சம் கவிதை பாடிக்
கூத்திருக்கும் திருப்பாதம் குறிக்கொள்ளும்
திருவுள்ளக் குறிப்பே வாய்ந்தோய். (5)

கடுங்குளிரில் கொடும்பனியில் காற்றிடியில்
பனிக்கட்டிக் கரூக்கி னூடே
விடுங்குறிதப் பாதகணை விரைகுதல்போல்
அன்பர்பலர் வியந்து நோக்கப்
படுங்குறிப்பின் இமயமுடிப் பாங்கரிலே
நீ புகுந்து பரசிவத்தைத்
தொடுங் கருணைத் திருக்கயிலைத் தூமுடியில்
இருகண்ணால் துலங்கக் கண்டாய். (6)

சொன்மாலை பலபாடிச் சோர்வகற்றி
யாத்திரையில் சொல்லுந் தோறும்
நன்மாலைத் திருமுறையால் கயிலாய
நாதனையே நவிலப் பாடித்
தொன்மாலைச் சைவநெறிக் கயிலாய
பரம்பரையாம் தூய வார்த்தை
தன்மாலை யாவிளக்கும் தகைமையினாய்
ஞானமுறுந் தவமே யானாய். (7)

அடியவரோ டுரையாடி அவர்மனத்துக்
குறைகள்தமை யறிந்தே அன்னோர்
குடிமுழுதும் வாழ்ந்திடவே அருளுரைகள்
புரிந்தருளிக் கோட்டம் தீர்க்கும்
அடிகள்நினைப் போற்றிசைக்க அடியோங்கட்
கிசைந்தருளும் அருமை எண்ணி
வடிதமிழாற் பாட்டெடுப்பேம், தருமையா
தீனவளம் தழைக வென்றே. (8)

திருநெறியாஞ் சைவநெறி உலகமுற்றும்
பரவுதற்குத் திட்டம் தீட்டும்
ஒருநெறியாந் திருவுள்ளம் உடையபெருந்
தவக்கடலே! உலகில் மீண்டும்
கருநெறியே படராமற் கடியவினைக்
கட்டறுத்துன் தாட்கீழ் வைக்கும்
பெருநெறியே பிடித்தொழுகும் பெரும்பேறு
பெற்றேம் யாம் பிழையற்றேமே. (9)

குருமணியே! அன்பர்மனக் குளிர்புனலே!
நறுநிழலே! கூற வொண்ணுத்
திருமணியே! தென்தமிழும் வடமொழியும்
உலகிடையே திகழக் கற்றே
ஒருமணியே! சுப்பிரநன் மாமணியே!
அருள்மணியே! வாய்க்கும் எங்கட்
கருமணியே! நின்னடிகள் கவிமலராற்
பரவியிரு கரங்குவிப் பேம். (10)

வாழியசீர்த் தருமையா தீனமடம்!
வாழியதன் வளமை காப்போர்!
வாழியசீர்க் குருபாதம்! வாழிசொக்க
லிங்கேசன்! வைய கத்தே
வாழியசீர்க் கயிலாயம் கண்டருளும்
பெருங்குரவன் வளர்பூந் தாள்கள்!
வாழியசீர்த் திருமரபு! வாழியெனப்
போற்றிசைத்து வணங்குவேமே. (11)

சிதம்பரம், 17—9—1967.

இங்ஙனம்,
சைவப்பெருமக்கள்.

---

* இயற்றியவர்: வித்துவான். சொ. சிங்காரவேலன் M.A.

## தில்லையம்பதியில்
## பேரவையின் 40 நாள் சமயப் பிரசாரத்தின் நிறைவு விழா
## 17—9—67 அன்று நடைபெற்றபோது சமர்ப்பித்துள்ள

# விண்ணப்பம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 25-ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் 1959-ம் ஆண்டில் திருக்கயிலை யாத்திரைக்கு பக்தகோடிகளுடன் எழுந்தருளிய போது குடியிருப்புக்கள் இல்லாத திருக்கயிலை மலையில், அழகுக்கு ஒருவரும் இணையில்லாத அபிராமவல்லி அம்மை, நூதன உடைகள் அணிந்து கொண்டு பொங்கும் புன்னகையுடனும் கையில் சாட்டையுடனும் ஓர் நூதனமான மங்கையைப்போல் தோன்றி "மிட்டாய்தே" என்று கேட்க ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் உடன் மிட்டாய் வழங்கியதும், நூதன மங்கை ஆனந்தமாய் மிட்டாயை வாயில் இட்டுக்கொண்டிருக்கையில் புகைப்படக்காரர்கள் படம் பிடிக்க முயன்றபோது "நை-நை" என்று சொல்லி நூதன மங்கை மறைந்துவிட்ட அற்புதச் செயல் ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணிகளின் தவ வலிமையையே எடுத்துக் காட்டாக விளக்கியுள்ளது என்பதனை அடியேன் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்துகொள்ளுகின்றேன்.

திருக்கயிலை யாத்திரையில் சீனர் எல்லைக் காவல் நிலையத்தில் சீனர்கள் பெரும் தலைவர் ஒருவரை சந்தேகப்பட்டு பலநாள் அங்கு நிறுத்தி வைத்துவிட்டனர். துவாரகா பீடாதிபதிகளையும் சீனர்கள் சோதனைகள் செய்ததில் நிறைய பொருள்களை பறிகொடுக்கவும் நேரிட்டது. ஆனால் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் கோஷ்டியுடன் காவல் நிலையம் எழுந்தருளியபோது சீனர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளைப் பார்த்ததும் சோதனைகள் ஒன்றும் நடத்தாமல் "போகலாமே! ஏன் இங்கே காத்திருக்க வேண்டும்" என்று கூறியது, மேலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் தவ வலிமையையே எடுத்துக்காட்டாக விளக்கியுள்ளது என்பதனையும் அடியேன் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்துகொள்ளுகின்றேன்.

தருமை ஆதீன வரலாற்றிலேயே 25-ஆவது குருமணிகளாகக் காட்சி அளித்துக்கொண்டுவரும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளே சமய புரட்சியின் முதலாவது மகாசந்நிதானமாக விளங்கிக்கொண்டு, மக்களிடத்தில் பக்தியும் — சமயப்பற்றும்

வாழ்க்கையில் பிணைந்துகொண்டுவர திக்கெட்டும் பக்திச்சுவை சொட்டச் சொட்ட அறவுரைகள் வழங்கிக்கொண்டு வருவதோடின்றி, அடிக்கடி "வானொலி" மூலமாகவும் மக்களுக்கு அறவுரைகள் வழங்கிக்கொண்டு வரும் வேளையில், மக்களிடம் மறைந்திருந்து வேண்டும் வரங்களை அள்ளிக்கொடுத்துக் கொண்டே வரும் கயிலையம்பதியான் கட்டளையால் மக்களிடத்தில் மேலும் பக்தியும் — சமயப்பற்றும் வளர்ச்சி பெற்றுக் கொண்டேவர "தமிழ்நாடு தெய்விகப் பேரவை" அமைக்கப்பட்டு அப்பேரவைக்குத் தலைவராக கயிலை முனிபுங்கவராகவே இருந்துவரல் வேண்டுமென்று பெருங்கருணை கொண்டுள்ள கயிலையம்பெருமான் கட்டளையாலேயே கயிலைத் தரிசனம் செய்துள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்களையே சென்ற ஆண்டும் பேரவைக்கு ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இவ்வாண்டும் 2ஆம் முறையாகப் பேரவைக்கு ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை அடியேன் தினசரி நினைந்து நினைந்து பெருமகிழ்ச்சி அடைந்துகொண்டு வருவதோடு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் தலைமையில் இயங்கிக்கொண்டு வருகின்ற தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் எதிர்கால நற்பணிகளால் தமிழகம் வெகுவிரைவில் சமயமணம் கமழக்கூடிய சிவராஜதானியாகவே காட்சி அளிக்கும் என்ற திடமான மனதுடன் மக்கள் எதிர்நோக்கியுள்ளனர் என்பதற்கு அறிகுறியாக, அண்மையில் மாயூரம் ஸ்ரீ வள்ளலார்கோயிலில் பேரவையின் சிறப்பு விழாவே எடுத்துக்காட்டியுள்ளது என்பதனை அடியேன் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்துகொள்ளுகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் ஞானபீடம் ஏறிய பொன்விழா தமிழகம் பூராவும் மக்கள் கொண்டாட தில்லை ஸ்ரீ ஆனந்தக் கூத்தப்பிரானின் திருவருள் துணைபுரிந்துகொண்டேவரல் வேண்டுமென்று, அடியேன் பெரும் ஆவல் கொண்டு ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருவடிகளில் தினமும், விண்ணப்பங்கள் சமர்ப்பித்துக்கொண்டும் வருகின்றேன் என்றும் வணக்கத்துடன் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன்.

வாழ்க பொற்பாத கமலங்கள்! வளர்க தங்கள் பேரவை! வெல்க தங்கள் திருச்செயல்கள்!!!

இப்படிக்கு,
மீளா அடிமை,

சிதம்பரம்,
17—9—67.

மா. பாலசுப்பிரமணியன்,
தினமணி, இந்துசாதனம் நிருபர்.

## தில்லை ஸ்ரீ ஐயப்பன் பக்த ஜன சங்கத்தார் வாசித்து அளித்த

# வரவேற்பு இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் "தமிழ்நாடு தெய்வீகப் பேரவை"க்குச் சென்ற ஆண்டில் ஏகமனதுடன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பல நல்தொண்டுகள் செய்து கொண்டுவந்து, இரண்டாவது முறையாக இவ்வாண்டும் பேரவைக்குத் தலைவராக ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதைக் கண்டு நாங்கள் பெருமகிழ்ச்சி அடைவதோடு, பேரவைக்கு எங்களுடைய முழு ஆதரவையும் கொடுத்து தங்களுடைய ஆணையின் வழியினைப் பின்பற்றி நடந்துகொண்டு வருவோம் என்பதனையும் பணிவுடன் தெரிவித்துக் கொள் கிறோம்.

தங்கள் ஆட்சிக்காலத்தில் திருக்கோயில்களெல்லாம் மிகத் தூய்மையாகத் துலங்குவதோடு, வழிபாட்டுக்கு வரும் மக்களை வரது உள்ளத்தையும் இறையன்பில் ஈடுபடுத்தி வருவது கண்டு இறும்பூதெய்துகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணிகள் எங்கு எழுந்தருளினாலும் அந்த இடமெல்லாம் தெய்விக சக்தி நிறைந்து காணப்படுவதோடு தங்களைப் பார்த்த பொழுதே தங்கள் முன்னிலையில் எல்லோருக் கும் ஓர் புத்துயிரும் சமயத்தினிடத்தில் புத்துணர்ச்சியும் அனுபவபூர்வமாகவே ஏற்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் ஆட்சியும் தொண்டும் திரு அவதாரமாகவே தோற்றமளித்துக்கொண்டு வருவதால், சமய உலகில் 5-வது குரவராகவே மக்கள் முன்பு காட்சி அளித்துக் கொண்டு வருகின்றீர்கள் என்பதனையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்க தங்கள் திருவடிகள்! வளர்க தங்கள் பேரவை!!

இங்ஙனம்,

தில்லை ஸ்ரீ ஐயப்பன் பக்த ஜனசங்கத்தின்

17—9—67, தலைவரும் மற்றும் உறுப்பினர்களும்,

### சிதம்பரம் பாம்பன் சுவாமிகள் மடத்தின் சார்பில்
### அளிக்கப்பெற்ற

# வரவேற்புப் பத்திரம்

"தண்டிகையி லேறுவார் தரைமிசை நடப்பார் தளங்கள்புடை சூழவருவார்
தனியாயு நிற்பார் தராதரங் கெட்டுத் தயங்குபவர் போலுழலுவார்
சண்டித் தனஞ்செய்து தெருவிற்கிடப்பார் சதானந்த மாயாடுவார்
தரையினிற் றுயிலுவா ரணையிற் படுப்பார் சமாதியிலு மினிதிருப்பார்
அண்டமெல் லாநொடியி லேசுற்று வார்பின்னு மசையாவோர் நிலையினிற்பார்
அசலபுவ னத்தையங் கையிலே காட்டுவா ரங்கேயடக்கி விடுவார்
தெண்டிரைக் கடல்சுலா முலகினின் சீடரவர் சித்தளவை கூறுபவரார்
திருநீடு பதியாய கயிலாச மலைமேவு சிவஞான குருசாமியே"

— பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்.

**வருக ! வருக !! வரையாது வழங்கும் வள்ளலே வருக !!!**

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளாய தங்களது அருளாட்சியில் சென்னையில் சமயப் பிரசார நிலையத்தையும், வைத்தீஸ்வரன் கோவிலில் அறுவைவிடுதியையும், இலவச சித்த வைத்திய நிலையத்தையும் அமைத்து இயங்கச்செய்தும், மேலும் தங்கள் ஆதீனத்தில் ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரிவரை அமைத்து படிப்புடன் சமய பாட போதனையையும், தேவார - ஆகம பாடசாலைகளையும் நடத்தி மக்களுக்கு நன்மை செய்வதை இம் மாநிலங் கண்டு மகிழ்ச்சியடைகிறது.

மேலும் ஆதீனத்திற்குட்பட்ட தெய்வத்தானங்களான பல சிவாலயங்களையும் 25-வது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியாய சந்நிதானத்தின் அருளாட்சியில் ஜீர்ணோத்தாரணமும், மகா கும்பாபிஷேகமும் செய்துகொண்டு வருவதால் தெய்வீகத் தலைவராகியுள்ள சந்நிதானம், தெய்வீகப் பேரவைக்கும் தலைவராகியுள்ளது தமிழ்நாடு செய்த தவமே.

முன்நாள் ஸ்ரீமத். மாணிக்கவாசகப்பெருமான் வாதிட்டு வெற்றியடைந்து சமயத்தைக் காத்ததும், ஸ்ரீமத். பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் சமயப் பிரசாரம் செய்து வெற்றி கண்டதுமான இத்தில்லைத் தேவத்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் தலைமையில் இயங்கும் தெய்வீகப் பேரவையின் பிரசாரம் நடைபெறுவது பெரும் வெற்றியைக் கொடுக்குமென்பது திண்ணம்.

திருக்கயிலாச மலையில் சத்தியையும் சர்வேஸ்வரனையும் கண்ணுற்று எல்லையிலா இன்பம் கண்ட தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளே ! வணக்கம்.

இன்னணம்,
கு. நயினுசாமி
பாம்பன் சுவாமிகள் மடம்,
சபாநாயகர் தெரு, சிதம்பரம்.

17—9—67.

## சிதம்பரம் திரு. டி. நடராஜ தீக்ஷிதர்
## தெய்வீகப் பேரவைக்குப் புனைந்து பாடிய பாடல்

இராகம் : புன்னுகவராளி. தாளம் : சதுரச்சாதி திரிபுடை.

### அவை வாழ அருள் புரிவாய்

(முதல் நிலை)

அவை வாழ அருள்புரிவாய் தில்லை
இறைவா உன் தனை நாடும் தெய்வீகப் பேர் (அவை வாழ)

(நடு நிலை)

தவயோகியும் அனுபவயோகியும்
பல தியாகியும் பற்பலராகியும் கூடும் நல் (அவை வாழ)

(கடை நிலை)

1 சத்தியம் நிலைக்கவும் சாத்திரம் ஓங்கவும்
நித்தியம் செய்வதே இவர்கள் பணி
பத்திசெய் பலன்களை எத்திசையும் சென்று
கத்தினுர் கதறினுர் கடமையினுல் இன்னுர் (அவை வாழ)

2 தன்னலம் கருதாத தமிழ் வாழவும்
தானென்று எண்ணுத வேதம் வாழவும்
அன்ப ருள்ளத்தெழும் அறம் வாழவும்
அகிலமெல்லாம் வாழ அனுதினமுனை நாடும் (அவை வாழ)

3 ஒப்புயர் வில்லாத ஒளி விளக்கே
சித்ஸபையில் வாழும் திரு விளக்கே
தப்பனைத்தும் தீர்த் தருள் விளக்கே
இப்புவியில் வாழும் இன்னுயிர்களுக்கே என்ற (அவை வாழ)

இப்படிக்கு,
டி. நடராஜ தீக்ஷிதர்.

17—9—67.

சிதம்பரத்தில்:

தருமையாதீனம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தை



திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள்

திறந்துவைத்தல்.

உ

குருபாதம்

திருவாவடுதுறை ஆதீனம்

## இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்

ஞானப்பண்ணை :

ஞானப்பண்ணைகளாக விளங்குவன சைவத் திருமடங்கள். இவற்றில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் அருள் தலைவர்கள் நாட்டிற்கும் சமயத்திற்கும் ஒளிநெறி காட்டும் உத்தமர்கள். இப்பரமாசாரியர்களது இனிய மொழிகளும், தேர்ந்த செயல்களும் உலகிற்கு நன்மை வழங்கிக் காக்கும் தன்மை உடையன, சமுதாயம் வழி தவறும்போது, வழி காட்டும் வாய்மையாளர்கள் இவர்கள்; மக்கள் மனமயங்கும்போது தெளிவு காட்டும் திருநெறியாளர்கள் இவர்கள்; உள்ளம் பரபரக்கும்போது அப்பரபரப்பிற்கு அணையிட்டு அமைதி வெள்ளத்தைப் பாய்ச்சும் அருள்நெறியாளர்கள் இவர்கள். துன்பம் கண்டு துவளும்போது 'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்; அவரவர் வினைவழி அவரவர் அநுபவம்' என்று அறிவுறுத்தி நிலைநிறுத்தி ஊக்கம் கொடுப்பது இவர்கள் அருள்வாக்கு. பரபரக்கும் நெஞ்சைப் பண்படுத்தப் 'பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன் வரவரக்கண்டாராய் மனமே' என்று அமைதி காட்டிப் பண்படுத்துவது இவர்கள் அமுதவாக்கு.

தமிழ்நாடு பெற்ற தவச்சிறப்பாக விளங்குவது துறைசையாதீனம். இதில் எழுந்தருளியிருந்த பரமாசாரிய சுவாமிகள் பலரும் நற்பணி புரிந்து நாடு காத்து சமயம் பேணி வருபவர்கள். இருபத்தொன்ருவது குருமாமணியாகத் துறைசையாதினத்தே வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளும், தருமையாதினத்தே இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானமாக அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும்

திருவுள்ளங்கள் ஒன்றிப் பழகி உலகுகாக்கப் பல பணி புரிந்தார்கள். திருநாமத்தாலும் ஒன்றுபட்டவர்களே ஆவார்கள். பெயர் பொருந்தியது; உளம் பொருந்தியது; செயல் பொருந்தியது; எல்லாம் பொருந்தியது.

துறைசையில் இருபதாவது குருமுதல்வராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் காலத்தேயே கொண்டிருந்த தொடர்பு இவர்கள் காலத்தில் மேலும் விளக்கம் அடைந்தது; உறுதி பெற்றது; நலம்பல கண்டது. இதனால் சமயவுலகு பெற்ற பயன்கள் பல. இவ்விளக்கத்தால் சமயத்தின் சிறப்பு மேலும் உயர்ந்தது. சைவ மடங்களின் கூட்டுறவினால் நலம்பல விளைதல் எவ்வாறு என்பதை நாடு கண்கூடாகக் கண்டது,

**தருமைத் தொடர்புகள் :**

துறைசைக் குருமணியவர்கள் உறுதியான தொண்டில் நாட்டம் உள்ளவர்கள்; செயல்திறம் பெருக வேண்டும் என்று சிந்தித்து வந்தவர்கள். திருமடங்கள் கூடிப் பணிபுரிய வேண்டும் என்பதிலே நம்பிக்கை உடையவர்கள். அவர்கள் தருமையின் 25 ஆவது கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுடன் அன்போடு பழகினார்கள்; கயிலைக் குருமணிகளின் ஆட்சி நலத்தை அவ்வப்போது பாராட்டினார்கள். ஆதீன நிகழ்ச்சிகளில் தாமும் கலந்து சிறப்பித்தார்கள்: திருவுள்ள மகிழ்ந்தார்கள்.

சீகாழியிலே ஸ்ரீ சட்டைநாத சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்ந்தபோது எழுந்தருளினார்கள். இரண்டு குருமணிகளைத் தரிசித்து அன்புலகு அப்போது அடைந்த மகிழ்ச்சியை அளவிட்டுரைப்பார் யார்? தருமையாதீனத்தே, பலகலைக் கல்லூரியைச் சார்ந்த புதிய கட்டடத்தைத் திறந்துவைக்க 21 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் தருமையாதீனத்திற்கு எழுந்தருளினார்கள் அவர்கள் திருக்கரத்தால் திறந்து வைக்கப்பெற்ற அக்கட்டிடத்தில் இன்று சிறும் சிறப்புமாகத் தமிழ்க் கல்லூரி செந்தமிழ் கற்பித்து வருவதுடன், அதைப் பிரார்த்தனை மண்டபமாகவும் பேணி வருகிறது.

மாயூரம் ஸ்ரீ குமரக்கட்டளை, தருமையாதீனத்திற்குச்சொந்தமான இருபத்தேழு திருக்கோயில்களுள் ஒன்று. அது அமைந்துள்ள ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயிலோ துறைசையாதீனத் திருக்கோயில். இந்தப் பழைய தொடர்பு இவ்விரு குருமாமணிகள் அருளாட்சிக் காலத்தே புத்துயிர் பெற்றுப் பொலிந்தது. குடிநீர்க குழாய் ஒன்றைக் குமரக்கட்டளை தேவஸ்தானத்தின் சார்பில் திறந்துவைத்த துறைசைக் குருமுதல்வர் அவர்கள் தங்கள் அன்பினைப்போல் வற்றாத நீர் வாய்ப்பையும் அங்கே மக்களுக்குத் தம் திருக்கரத்தால் வழங்கி நிலைத்த இடம் பெற்றுவிட்டார்கள் என்றால் அது மிகையாகாது. வைத்தியநாத சுவாமியை ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்ட இவர்கள் வைத்தீசுவரன்கோயில் போந்து வழிபட்டார்கள்; திருக்கடவூர் போந்து ஸ்ரீ காலசம்ஹார மூர்த்தியைப் பரவியிருக்கிறார்கள்; திருநள்ளாறு எழுந்தருளித் தரிசனம் புரிந்திருக்கிறார்கள்.

துறைசைக் குருமணியவர்கள் தருமையாதீனத்திற்கு எழுந்தருளியும், தருமையாதீன தேவஸ்தானங்கட்குப் போந்தருளியும் மகிழ்வித்தது போலவே தருமைக் கயிலைக் குருமணியையும் திருவாவடுதுறைக்கு எழுந்தருள்வித்து வரவேற்று விழா நிகழ்த்தியவர்கள். அங்குத் திருமடத்தில் இரண்டு குருமணிகளும் பன்முறை சந்தித்து அளவளாவினார்கள்; நாட்டு நலம் சமயநலம் குறித்துப் பன்முறை ஆராய்ந்தார்கள் மாணிக்கவாசகப் பெருமான் திருப்பணி நிறைவித்த ஆவுடையார் கோயிலுக்குத் தருமைக் குருநாதரை எழுந்தருள்வித்துப் பாராட்டினார்கள்,

இணைந்த யாத்திரைகள் :

இவ்விரு குருமணிகளின் தொடர்பில் சிறப்பிடம் பெறத்தக்கது இவர்கள் புரிந்தருளிய மலைநாட்டு யாத்திரை. இவை போன்ற பலவும் நிகழ்ந்ததுண்டு. சமயாசாரியப் பெருமக்கள் இணைந்து புரிந்தருளிய யாத்திரை போன்று இஃது அமைந்திருந்தது. திருவஞ்சைக்கள வழிபாடு இதில் நிகழ்ந்தது. 'தான் எனை முன்படைத்தான்' என்ற திருப் பதிகத்தை அஞ்சையப்பர்க்கு அறிவித்தார் நம்பியாரூரர். அஞ்சையப்பரை வழிபட்ட இவ்விரு ஆசாரியப் பெருமக்களும் தம்முடன் அன்பர் பலரையும் அழைத்துச்சென்று அவர்கட்கும் அருள் பெருகப் பண்ணிய நற்செயலை மறப்பார் யார்?

**பணி பல கண்டமை :**

உறுதியான உள்ளமும் நல்லது எதையும் விரைந்து முடித்தல் வேண்டும் என்ற விருப்பமும் உடைய இவர்கள் செய்துள்ள சமய, சமூக, சமுதாயப் பணிகள் பல. பல இலட்சக் கணக்கான வெண்பொற் காசுகளை அருட்கொடை வழங்கியவர்கள். அடக்கமாகப் பணிபல புரியும் அருங்குணமும் விளம்பரம் வேண்டாத வியத்தகு தொண்டும், உடையவர்கள் இவர்கள் என்று சுருக்கமாகக் கூறலாம்,

**ஆதீனப் பணிகள் :**

ஆதீன நிலபுலங்களைப் புதிய முறையில் கண்காணித்து வேளாண்மையைப் பெருக்கினார்கள் ; கால்வாய்களைத் திருத்தியும், அணைக்கட்டு அமைத்தும் அழகுபடுத்தினார்கள். ஆதீன வருவாயை விரிவுபடுத்தினார்கள். பொதுச்சுகாதார வசதிகளைப் புரிந்தார்கள். கிணறுகள் பல புதியவாக வெட்டிப் பாசன வசதிக்கு வசதி செய்தார்கள். எடுத்தணிவயல் என்ற கிராமம் இவர்கள் காலத்தில் சீர்ப்படுத்தப்பட்டது. மக்கள் படும் துன்பத்தை உணர்ந்து இவர்கள் இப்படிப் புரிந்த காலத்திற் கேற்ற - இடத்திற் கேற்ற நற்பணிகள் பல.

**திருமந்திர விளக்கத் திருநெறி :**

"மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்" என்று அப்பர் திருமுறை தெளிவிக்கும். திருவாவடுதுறைக் குருமூர்த்திகள் ஸ்ரீ வைத்தியநாதமூர்த்தியை ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டவர்கள். அப்பெருமானைப் பாடிய அப்பர் சுவாமிகளின் வாக்கே இது. ஆதலால் இவர்கள் இந்த மூன்றையுமே விளக்கம் கண்டவர்கள். மந்திரம் ஆகிய பெருமான் என்பதைத் திருமூலர் திருமந்திரத்தின் வழி உலகிற்கு விளக்கியவர்கள். திருமந்திர மாநாடு திருவாவடுதுறையிலே நிகழ்த்தினார்கள். உலகப் பேரறிஞர்களை, நாடறிந்த சமயச் சான்றோர்களை, வரவழைத்து தக்க சன்மானங்கள் அளித்து ஊக்கிப் பாராட்டி உரை நிகழ்த்துவித்தார்கள். திருமந்திர மாநாட்டு நிகழ்ச்சிகளை இனிய புத்தகங்களாக வெளியிட்டார்கள். திருமந்திரம் திருவாவடுதுறைக்குரிய சிறப்புப்பனுவலாக உள்ளதால் அதனை எங்கும் பரப்புவது

ஆதீனத்தின் கடமை என்று அடிக்கடித் திருவுளம் பற்று வார்கள். பஞ்சாட்சர தீபம் என்ற பெயரில் விளக்க வுரைகளையும், கட்டுரை விளக்கங்களையும் திருமந்திரத்திற்குப் பகுதி பகுதியாகக் தக்க புலவர்களைவிட்டு எழுதுவித்து வெளி யிட்டார்கள். இன்று நாடெங்கும் திருமூலர் திருமந்திரம் விளங்கித் தோன்றுவதற்கு இவ்வாறு, இக்குரு முதல்வரவர்கள் மூல காரணராயிருந்தார்கள் என்பதை சமய வரலாறு மறவா தென்று கூறுதலும் வேண்டுமோ ?

சமுதாயத் தொண்டு :

மருத்துவ மனைகளுக்கு உதவுவதன் மூலம் பிணியுற்றவர் களுக்கு இவர்கள் செய்த உதவிகள் கணக்கிலடங்கா. சிங்கிப் பட்டி, குடந்தை மகப்பேறு மருத்துவவிடுதி, அரசாங்க எக்ஸ்ரே நிலையம் முதலிய பல இடங்களில் இவர்களது அருட்கொடை விளக்கம் பெற்று என்றும் நிற்கின்றது.

கல்விக் கொடைகள் :

தமிழக முழுதுமுள்ள கல்விச் சாலைகளில் இவர்களது அருள் வண்ணம் கலந்தே இருக்கும். கொடுக்கப் பழகிய இவர் களது வண்ணம் என்றும் குன்றாத கற்பகத்தருவாகவே இருந்து வந்ததை ஏற்று மகிழ்ந்த எல்லோரும் அநுபவத்தால் அறிவர். திருஞானசம்பந்தரது வேள்விக்கு ஆயிரம் பொன் கொடுத்த பெருமான் உறையும் பதி திருவாவடுதுறையல்லவா. அவன் அருளால் வந்த ஆக்கம் இது; இதை அவன் அருட்பணிகளுக் கென்று ஆக்குவதன்றோ அறிவுடைமை ஆவது' என்று அடிக் கடிக் 'கூறி மகிழ்வது இவர்கள் இயல்பு. இவ்வியல்பையும், இவர்களது செயல்களையும் இணைத்துக் கண்டால்,

"கொடையளி செங்கோல் குடியோம் பல்நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி'

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்று வள்ளுவர் கூறியது, முடியரசர்களுக்கு மட்டும் மொழிந்த தல்ல; ஞான அரசர்களுக்கும் அருளாட்சிபுரிந்துவரும் அருள் தலைவர்களுக்கும் ஏற்ப இயம்பியதே என்று எண்ணத் தோன்று கின்றது.

**சமயத் தலைவர்கள் சந்திப்பு : பேரவை யாக்கம்.**

சமயப்பணிகளில் இவர்கள் புரிந்தருளிய கும்பாபிஷேகங்கள், குறிப்பாக மாயூரம், எடுத்தணிவயல் முதலிய கும்பாபிஷேகச் சிறப்பை அறியாதார் இல்லை. ஸ்ரீ நமசிவாயம் அச்சகம் நிறுவி எண்ணற்ற பல நூல் வெளியீடுகளைக் - குறிப்பாகச் சைவ சித்தாந்த சாத்திரப் பதிப்புக்களை, உலகெங்கணும் உலவ விட்டமையை அறியாதார் யாரும் இல்லை. தருமையாதீனம் குருமாமணியவர்களுடன் சந்தித்ததுபோன்றே பிற சமயத் தலைவர்களையும் இவர்கள் சந்தித்துச் சமய ஆக்கத்திற்குப் பெரும்பணி புரிந்தார்கள். ஜீயர் சுவாமிகள், மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம்அவர்கள், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள்அவர்கள், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முதலிய மகாசந்நிதானங்களை, தாங்கள் சந்தித்து அளவளாவி நாட்டிற் சமயநெறி சிறக்கக் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட சிறப்பு உடையவர்கள். இவர்களது இத் திருவுள்ளத்திற்குப் பொருத்தமாகச் சென்னை மாநிலங்களின் அறநிலைய ஆணையராக விளங்கிய உயர்திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியாரவர்கள் பெருமுயற்சியால் தமிழ்நாடு தெய்விகப் பேரவையும் உருவாயிற்று. அதிலும் சென்னையில் நிகழ்ந்த அமைப்பின் முதல் கூட்டத்திற்கு வருகை புரிந்து அதன் செயலாக்கத்திற்கு வேண்டியன புரிந்து மகிழ்ந்தார்கள். தருமைக் குருமணியவர்களே பேரவையின் முதல் தலைவராக இருத்தல் வேண்டும் என்று திருவுளம் கொண்டு, அவ்வாறே அவர்களை வற்புறுத்தி அத்தலைமைப் பொறுப்பினை ஏற்கவும் செய்து மகிழ்ந்தார்கள்.

இவ்வாறு இவர்கள் கொண்ட அன்பின் வலியால், இன்று, 'புனிதர் பேரவை' என்று சேக்கிழாரால் பாராட்டப்பெற்ற தெய்விகப் பேரவை நற்பணிபல புரிந்து வருகிறது; அதனுடைய ஒளி மயமான எதிர்காலப் பணிகள் ஒவ்வொன்றிலுமே, துறைசைக் குருமணியின் தூய உள்ளம் விளங்கி அவர்கள் புகழைப் பறை சாற்றிக்கொண்டிருக்கும் என்பது உறுதி. அவர்கள் அருள் உருவிலே நின்று, அதன் ஆக்கம் பாராட்டி வாழ்த்துவர் என்பது திண்ணம்.

" மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீ "

என்று புறநானூறு பாடிய வரிகளின் விளக்கம்தான் இக்குரு மணிகளது வாழ்வு என்றால் அது மிகையாகாது.

**துன்பம் துடைக்கும் திருக்கரம் :**

நாட்டில் - இமயமுதல் குமரிவரை எங்கும் துன்பமும் துயரமும் நேர்ந்தபோதெல்லாம் இவர்களது கொடைக்கரம் அங்கெல்லாம் நீளும்; வாரி வழங்கும்; துன்பம் துடைக்கும்; இன்பம் பெருக்கும். எடுத்துக்காட்டாகச் சீனப் படையெடுப்பு, பாகிஸ்தான் படையெடுப்புக்களால் நம் இந்திய நாட்டரசுக்கு இடர் வந்துற்றபோது பெருநிதி வழங்கிப்பெரும் புகழ் பெற்றார் கள்; ஆந்திராவிலே வெள்ளம் வந்தபோது அஸ்ஸாமிலே பூகம்பம் ஏற்பட்டபோது, திருவாங்கூரிலே பஞ்சம் விளைந்த போது, வேதாரணியத்திலே புயல் அடித்தபோது இவர்களது இதயத்தின் கனிவை - நெஞ்சின் ஈரத்தை மனத்தின் குழைவை நாடு கண்டது; நல்லோர் கண்டனர்.

**சிவபரிபூரணம் :**

ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளை வழிபட்ட புண்ணியப் பேற்றினால், கேதாரம், நேபாளம் முதலிய இமாசல யாத்திரைகள் பாடல்பெற்ற சிவதல யாத்திரைகள் ஜோதிர்லிங்க யாத்திரை கள் முதலிய அகில இந்திய யாத்திரைகளும் புரிந்து அவற்றால் நிறைந்த அருளாற்றல் உடையவர்கள். சிவத்தொண்டாகிய பதி புண்ணியமும், மக்கள் தொண்டாகிய பசு புண்ணியமும் பெருக்கிய இவர்கள் 20—9—67 இல் திருமரபு தழைக்கப்பெரிய பூஜை ஒடுக்கம் ஸ்ரீமத். சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு தம் குருபக்தியின் விளக்கமாகத் தமக்குமுன் னிருந்த குருமூர்த்திகளின் திருப்பெயராகிய ஸ்ரீலஸ்ரீ அம்பல வாண தேசிகர் என தீட்சாநாமம் சூட்டி ஞானாபிஷேகம் செய்து 23—9—67 சனிக்கிழமை ஜன்மநட்சத்திரமாகிய பரணி நாளிலேயே சிவாத்துவைத முத்தி நிலையாகிய சிவபரிபூரணம் எய்தினார்கள்.

**எதிர்காலத்தின் சிறப்பு:**

அருளாட்சி யேற்றுள்ள 22 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

அரை நூற்றுண்டாக ஸ்ரீநமசிவாய மூர்த்தியையும் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானையும், ஸ்ரீ ஞானமா நடராசப்பெருமானையும் பூசை செய்து வழிபட்ட புண்ணியப் பேறுடையவர்கள். இப்புண்ணியப் பயனுக இன்று இவர்கள் குருமூர்த்திகளாக எழுந்தருளும் பேறு பெற்றுள்ளார்கள். ஆழ்ந்த பக்தியும், முதிர்ந்த அனுபவமும், சமய சீலமும், சமய நூற்கலையுணர்வும் வாய்ந்த இவர்களது அருளாட்சியில் சைவம் தழைக்கும்; தமிழ் செழிக்கும்; ஞானநெறி பரவும் என்பது உறுதி.

வாழ்க துறைசை, தருமையாதீனங்கள்!
வளர்க திருக்கயிலாய பரம்பரை ஞானநெறி!
வாழ்க உலகெலாம்!

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam.

The young members Indian Leagal Purasawalkam Madras-7, have been visiting various shrines, but the visit to this shrine is unfurgattable, the Puja has been very well done. The management were very hospitable and is a befitting branch of the Dharmapuram Adhinam, we the and all those responsible for our beautifu l dharsan and good reception. May god grant this institution all greatness and useful service to the Asthiha public.

(Sd.) K. Srinivasam, B. A., B. L.
Advocate.
Vice-president, Y. M. I. L.

(Sd.) M. K. Ranganathan
Secretary, Y. M. I. L.
Madras-7.

3—10—67.

# சுந்தரர் வெண்பா

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling

சுந்தர நின் ஞமத்தைச் சொல்பவர்க்கு நல்லனவே
வந்துறுமென் ஞர்க்கின்ற வார்த்தையினைக் கேட்டிசைத்தேன்
சிந்தை யுறுதுயரைச் சீராக்கி இன்புறுத்தி
நொந்தழுவேன் தன்னையே நோக்கு. (1)

'ஊனுயிரை வேருக்கி' உத்தமன்ருன் செய்ததனை
ஊனுருகப் பாட்டாய் உரைத்தோனே! — தேனுருகும்
வெள்ளமாம் நின்கவிக்கண் வேண்டிக் கரைந்திருப்பேன்
வள்ளலே கேட்பேன் வரம். (2)

பெருமிழலை சேர்ந்தே பிறங்குமடி யார்க்கு
வருநலங்கள் ஈந்தருளும் வள்ளால் — அருவினையால்
நாளுக்கு நாளிங்கே நைவேன்றன் நெஞ்சினையுன்
தாளுக்கே வைத்தல் தகவு. (3)

இருபூவை யாரோ டிணைந்திங்கே வாழ்ந்தும்
வருவினைகள் அற்றவன் ஞெண்டா! — தருமலிந்த
வெண்ணை நல் லூரில் விளங்கும் அருட்டுறையில்
தண்ணருளைக் கண்டாய் தழைத்து. (4)

அடியார்க்கு நல்லானும் அம்மையப்பன் போன்றே
அடியார்க்கு நல்லாயும் நீயே! — அடியார்க்கு
நீயருளுந் தொண்டத் தொகையென்னும் நீள்மாலை
தாயருளே யாகுந் தரம். (5)

"மீளா அடிமை" யென மேனுள் நீ கூறுமொழி
ஆளாம் அடியேற்கிங் காகாதோ?— தோளாத
முத்தே! சிவநெறிக்கோர் மாண்பே! முழுமுதலே!
வித்தே! நினைவணங்கு வேன். (6)

'பிழைக்கை வரைந்தேயும் பால்கொள்வர்; பாரில்
வழுக்கினும் நின்னை வரையேன் — அழுக்குடையேன்'
என்றருளும் நின்சொல் இருவினையாற் கட்டுண்டே
நின்றிருப்பே னுக்கே நிலை! (7)

கறவைபாற் கன்றெனவே கண்ணீர் பெருகி
அறவோன்பால் அன்பால் அழுதே — உறவாட
எண்ணுவேன். ஐயா! இதயங்கல் ஆனல்,என்
பண்ணுவேன் சொல்லாய் பரிந்து. (8)

ஆண்டு பலவாக அன்புடனே தெய்வீகம்
ஈண்டுகின்ற பாடல் எடுத்திசைப்பேன் ஆயிடினும்
பண்பட்டி லேன்மனத்துப் பார்த்திருப்பே னுங்காலம்
புண்பட்ட நெஞ்சம் புகுந்து. (9)

சங்கிலியார் தோள்பிணைந்தே சார்கின்ற சான்ருேனே
சங்கிலியாம் பாசத் தனித்தொடரில் — தங்கிலியாம் *
என்னுயிர்க்கே ஆசானுய் இன்னுரைகள் ஈந்தருளி
முன்னவன்ருள் சேர்ப்பாய் முனைந்து. (10)

உயிர்க்காதல் மாறி உயிர்க்குயிராங் காதல்
பயிறலே வாழ்வின் பரிசாம் — துயில்நீங்கின்
உண்மை தெளிவாகும் என்னுமுரை உன்வாழ்வின்
திண்மையாக் காண்பேம் தெளிந்து. (11)

ஆரூர்ப் பர்வைக்கா ஆரூர ராம்பறவை
பாரூரச் செய்தருளும் பாவலனே! — தேருரும்
வீதிக்கே தாள்நோவ வித்தகனைப் போக்கின,நீ
யாதியற்ருய் நின்கவியா லீங்கு. (12)

"ஏழிசையா யின்னமுதாய் இன்சுவையாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய் துரிசுகளாய்" என்றிறையை
நேர்பட் டுறவாடல் நின்னையின்றி வேறெவர்க்குச்
சீர்பெறவே வாய்க்கும் செறிந்து. (13)

நாவலர்கோன் நன்கருளுந் தொண்டத் தொகையதுவே
பாவருஞ்சீர் அந்தாதி யாமுளைத்துப் பாரிதனில்
தொண்டர் புராணத் தொகுநிழலாய்ப் போந்ததுகாண்
மண்டுபுகழ் கொண்டே மலிந்து. (14)

ஆளுடைய நம்பி அடிபோற்றிச் செந்தமிழால்
தாளுடைய தண்மலராச் சார்த்தியசொல் மாலையிது
பூங்கயிலை வெற்பில் புகுந்த திருநாளில்
ஆங்குறிப்பின் ஆதல் அருள். (15)

---

* தங்கு + இலி + ஆம் எனப் பிரித்து, ' தங்கிக் கிடக்கின்ற, ஒன்றும் அற்றவர் ஆகின்ற' எனப் பொருள் உரைக்க.

வேளூர் தேவஸ்தானம் ( வைத்தீசுவரன்கோயில் )

# இலவச சித்த வைத்தியசாலை,

## டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

( மலர் 26, இதழ் 9, பக்கம் 527 இன் தொடர்ச்சி )

## தேன்

தொண்டையில் ஏற்படுகின்ற சில வலி, குரல் வளையத்தில் அடிக்கடி புண் ஆகுதல், அதனல் குரல் மாற்றமடைதல் அல்லது குரல் தொனியே இல்லாது தொண்டையில் அடைத்து விடுதல் போன்ற கபநோய்கள் கண்டபோது ஒரு நாளைக்கு நாலு ஐந்து தடவை தேனை துளசிசார், வெற்றிலைச்சார் அல்லது குப்பமேனிச்சார் சிறிது கலந்து உள்ளுக்குச் செலுத்தி வந்தால் நல்ல குணம் ஏற்படும். தொண்டையின் வெளிபாகத்திலும் தேனுடன் கல்யாணமுருங்கையிலைச்சாறு அல்லது முருங்கை யிலைச்சாறு அல்லது சுண்ணும்பு கலந்து தடவி வந்தால் மேற் கண்ட நோய்கள் அறவே நீங்கி நல்ல சுகம் தரும். இதனல் தான் தேனுக்கு "ஸ்வீர்யம்" என்ற பெயரும் வழங்கப்பட்டது.

ஜீரணசக்தி குறைந்து நாளுக்குநாள் இளைத்துக்கொண்டே வருகின்ற பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும், குடல் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சத்துநிறைந்த ஆகாரங் கள் எளிதில் ஜீரணமாவதில்லை. இவர்களுக்கு தினந்தோறும் ½ அவுன்ஸிலிருந்து 1 அவுன்ஸ் வரை 'தண்ணீருடன் கலந்து உள்ளுக்குக் கொடுத்துவந்தால் நரம்புகள் பலம்பெற்று நரம்புத் தளர்ச்சி நீங்கிவிடும். நீண்ட நாட்கள் தொடர்ந்து தேனையே ஆகாரமாக உட்கொண்டு வந்தால் அபூர்வமான ஞாபகசத்தி யையும் ஞானவைராக்ய சத்தியையும் பெற்று சோர்வின்றி அறிவு விசாலமாகி ஞானதேகத்தைப் பெறுவதால் தேனுக்கு "மேத்யம்" அல்லது "விருஷயம்" என்ற பெயர் வந்தது.

"ஊனத்திருள் நீங்கிட வேண்டில்
ஞானம் பொருள்கொண்டடி பேணும்
தேன் ஒத்தினியான் அமரும் இடம்
வானம் மயிலாடு துறையே" —ஞானசம்பந்தர்.

"ஊனய் உயிராய் உணர்வாய் என் உட்கலந்து
தேனய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
.................................அம்மானய்"

சம்பந்தர் மாணிக்கவாசகர் போன்ற ஞானப்பெரியார்கள் இறைவனை தேன் ஒத்த இனியான் என்றும் தேனாகவே இனிக்கின்றவன் என்றும் கூறுவதால் தேன் உடலுக்கு மட்டும் ஆகாரமாக அமையவில்லை. உயிருக்கும் உறுதுணையாக அமைகின்றது எனக் கொள்ளலாம்.

## நோயாளிகளின் குறிப்பு.

6—9—1967.

Sir,

I have taken my mother to cuddalore to get treatment suspecting it to be Cancer in the right foot on the front of the toe and there was growth of tissues two inches width, The Cuddalore doctor advised me to go to Cancer institute Adayar, Madras. Thay have tested the wound and gave some radium treatment though it reported there was evidence of malignency. For more than one year she suffered very much as it was not cured and found no improvement in the alopathis treatment. Though I have given her treatment for more than two years it was not improved and it was increasing and the wound was spreading.

In the year 1966 March accidentally she heard about Siddha Hospital at Vaithiswarankoil and consulted with Dr. K. Ramakrishnan, who suggested treatment for two months and she took treatment. To my astonishment the whole wound and the growth of tissues was completely cured. Now she is alright. I thank the Dharmapura Adinam who has established a good Siddha Hospital and placed a kind and sincere doctor who knows the Siddha system of medicine thoroughly. I wish him every success and thank him.

Yours sincerely,
P. B. S. Ramanujam Ayangar,
Audit Assistant,
c/o. A. N. Seetharaman,
Income Tax Practitioner,
Cuddalore N. T.

Camp:
Nangur,
6—9—67.

தருமையாதீனம், மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில்




துறைசையாதீனம், 21-ஆவது மகாசந்நிதானமவர்கள்
குடிதண்ணீர்க் குழாயைத் திறந்துவைத்தல்.

தருமையாதீனம் ஆவணிமூலவிழாவில்




ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திரு. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்கட்கு
"சைவம் பெருக்கும் சீலர்" என்னும் பட்டம் வழங்கி
ஆசி அருளல்.

சிதம்பரத்தில், தருமையாதீனம்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடம் திறப்புவிழாவில்



Dr. திரு. K. அரங்கசாமி பிள்ளை அவர்களுக்கும்,
காட்டுமன்னார்குடி சின்னப்பண்ணை திரு. M. ராமலிங்கம்பிள்ளை
அவர்களுக்கும் பொன்னாடைபோர்த்தி வாழ்த்தியருளியது

சிதம்பரத்தில் சைவப்பெருமக்கள் அளித்த வரவேற்பு



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள்
சிதம்பரம் தருமையாதீனக் கட்டளை மடத்திலிருந்து நடராசப்பெருமான்
தரிசனத்திற்கு எழுந்தருளல்.

# செய்திகள்

## தருமையாதீனத்தில்

## ஆவணிமூல விழாவும் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும்

தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்தருளும் ஆலவாய்ப் பெருமானின் சிறப்புத் திருநாள் ஆவணிமூலத் திருநாள். இத் திருநாளையொட்டி பத்துநாட்கள் ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

ஆவணிமூல விழாவையொட்டி ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா 10. 11, 12—9—67 ஆகிய மூன்று நாட்களில் நடைபெற்றது. 10—9—67 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, வேத சிவாகம பாடசாலை ஆண்டு விழாவும், 11—9—67 திங்கட்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி, தேவார பாடசாலை ஆண்டு விழாவும், 12—9—67 செவ்வாய்க்கிழமை அன்று ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஆண்டு விழாவும் சிறப்புற நிகழ்ந்தன. விழாவில் ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர்களும், அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார் M. A., அவர்களும் சொற்பெருக்காற்றினார்கள். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தலைப்புக்களாக அமைந்தன.

12—9—67 செவ்வாய்க்கிழமை ஆவணிமூலநாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களால் ஆண்டு தோறும் செந்தமிழ்ப் புலவர் ஒருவருக்குப் பட்டம் அளித்துப் பாராட்டுவதுபோல் இவ்வாண்டு சென்னை திரு. சச்சிதானந்தம் பிள்ளை B. A., L. T., அவர்களுக்கு "சைவம் பெருக்கும் சீலர்" என்னும் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி ஆசி அருளி ஆதீனக் கல்வி நிலையங்களின் மாணவ மாணவியர்கட்குப் பரிசுகள் வழங்கியருளினார்கள். தருமையாதீனம் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பட்டம் பெற்ற

திரு. பிள்ளை அவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். சைவம் பெருக்கும் சீலர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் கருணையையும், அவர்கள் சைவத்திற்கும் தமிழுக்கும் செய்து வரும் தொண்டு களையும் பாராட்டிப் பேசினார்கள். விழா இறைவணக்கத்துடன் தொடங்கப்பெற்று, வாழ்த்துடன் இனிது நிறைவுற்றது.

ஒவ்வொருநாளும் மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சி கள் நடைபெற்றன. ஆண்டு விழாவில் கல்வி நிலையங்களின் ஆண்டு அறிக்கைகள் படிக்கப்பெற்றன.

## தருமையாதீனத்தில் நவராத்திரி விழா

தருமையாதீனத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலக்ஷ்மி திருக்கோயிலில் நவராத்திரி விழா ஆண்டு தோறும் நிகழ்வதுபோல் இவ்வாண் டும் 4—10—67 முதல் 12—10—67 முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. பதினேழாவது சதசண்டி யக்ஞம் நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் நிகழ்ந்தது. அவ்வமயம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு லக்ஷார்ச்சனையும், வேதம், தேவீமாகாத்மியம், துர்க்காசூக்தம், அபிராமி அந்தாதி. திருமுறைகள் முதலிய பாராயணங்களும் நடைபெற்றன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இருவேளை யிலும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். 11—10—67 அன்று சதசண்டி யக்ஞ மகாபூர்ணாகுதியும். 12—10—67 அன்று யாக கலசாபிஷேகமும், ஆறுவது கோடி அர்ச்சனைப் பூர்த்தியும், ஏழாவது கோடி அர்ச்சனைத் தொடக்கமும் நிகழ்ந்தன.

### சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

## வேளூர்க் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும்விழா

வைத்தீசுவரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சி 10-5-67 கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் உபயத் தில் அபிஷேக ஆராதனை நிகழ்த்திய பிரசாதம் 12—5—67ல் நிலையத்தில் திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தலைமை யில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பெற்றது. 6—6—67ல் அன்பளுதபுரம் வகையார் தர்மபாக உபயத்தில் நடைபெற்ற அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் 7—6—67ல் திரு. N. R. முருக வேள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப் பட்டது. 4—7—67 கிருத்திகையன்று வேளூரில் நடைபெற்ற

அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் 5—7—67ல் நிலைய மன்றத்தில் திரு. P. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டன. 31-7-67 கிருத்திகையன்று நடைபெற்ற அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் 1—8—67ல் திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டது. 26—8—67 கிருத்திகையன்று வேலூரில் நடைபெற்ற அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் 28—8—67 மாலை நிலையத்தில் திரு. N. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டது. தருமபுரம் பி. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினர்.

## திருவாமூரில் ஆவணிமாதச் சதயவிழா

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் (திருநாவுக்கரசர்) அவதாரத் தலமாகிய திருவாமூரில் திருக்கோயில் கொண்டுள்ள ஸ்ரீ அப்பர் சுவாமிக்கும். ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் உடனுறை ஸ்ரீ பசுபதீசுவரசுவாமிக்கும் 21-8-67 ஆவணிமாதச்சதயத்தன்று திருவாமூர் மிராசுதார் திரு. ஆர். நாராயண ரெட்டியார் உபயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மதியம், அடியார்கட்கு மாகேஸ்வர பூசையும், மாலையில் உழவாரப்பணி, கூட்டு வழிபாடு முதலியனவும், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன. உள்ளூர் வெளியூர்களிலிருந்து திரளான பக்தர்கள் வந்து தரிசித்து சமயப் பிரசாரத்திலும் பங்குகொண்டு பயனடைந்தனர். இப்புனித நாளில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் ஆலய நித்திய வழிபாட்டிற்காக, வீரப்பெருமாநல்லூர் திரு. பி. ஏ. இராமமூர்த்தி ரெட்டியார், 1 ஏக்கர் 25 செண்ட் புஞ்செய் நிலமும், அதே ஊர் மற்றொரு இராமமூர்த்தி ரெட்டியார் 50 செண்ட் புஞ்செய் நிலமும் நன்கொடையாக அளித்தார்கள். அதற்குரிய பதிவுப் பத்திரங்களை ஸ்ரீ அப்பர் சந்நிதியில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. ஆர். நாராயண ரெட்டியாரிடம் சிதம்பரம், திரு. என். எம். பொன்னம்பலம் பிள்ளை வழங்கினர். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை கூறும்போது பக்தர்களின் முயற்சியாலும், நன்கொடைகளாலும் ஸ்ரீ அப்பர் ஆலயம் வளர்ச்சியடைவதற்கு மகிழ்ச்சி தெரிவித்து, இதுவரை 12 ஏக்கர் நிலங்கள் அப்பர் ஆலயத்திற்கு அன்பர்கள் அளித்துள்ளது பாராட்டத் தகுந்தது என்றும், பிரசார மண்டபம் கட்டவும், கோபுரம் அமைக்கவும், அப்பர் சந்நிதியில் நேர் ரோடு போடவும் மக்கள் ஒத்துழைப்பு மிகவும் தேவை என்றும் குறிப்பிட்டு எல்லோருக்கும் நன்றி தெரிவித்து வாழ்த்தினர்கள்.

# எதிர்காலம். -திரு. கே. முத்துஜோதிடர்

(பிலவங்கவஹ ஐப்பசிமீ 1௳ முதல் 30௳ முடிய)

(18—10—67 முதல் 16—11—67 முடிய)

## 1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பார்தங்களும் சுபமேயாகும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் நூதனமாகச் சேருதலும், கிரயவிக்ரயங்களும், அன்யஸ்தலவாசமும், சுகபோகங்களும், சத்ருமைத்திரமும், தன தான்ய விருத்தியும், நஷ்டதனபிராப்தியும் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பினாலும் ஆசியாலும் சகல காரியங்களும் சாத்தியமாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

விருஷப ராசி 9 பாதங்களும் இடம் மாறி நூதன உத்தி யோக லாபம் கிடைக்கச்செய்யும். தெய்வபலம் ஓங்கும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். பெரியோர்கள் ஆசி கிடைக்கும். குடும்பம் ஓங்கும். சுபாதிகள் நடக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

## 3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் வம்ச விருத்தியோடு சுக ஜீவன மும், இல்லற சுகமும் ஓங்கச் செய்யும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் கிடைக்கும். ஆரோக்கியம் உண்டுபண் ணும். இராஜாங்க மூலமாயும், மேலோர்களின் மூலமாயும் சுகம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடக ராசி 9 பாதங்களும் கிரய விக்ரயங்கள் மூலமாய் லாபம் உண்டுபண்ணும். கடன், வியாதி, துக்கங்கள் எல்லாம் நிவர்த்தியாகும். கிராம பூமிகள் விருத்தி அடையும். ஆரோக் கியம் உண்டுபண்ணும். ஈதிபாதைகளால் மத்தியகாலங்களில் கொஞ்சம் சிரமம் காட்டும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். ஜீவன விருத்தி ஏற்படும். இரக சுகம் உண்டுபண்ணும். சகவாச சேர்க்கையினுலும் துஷ்டர்களாலும் கொஞ்சம் சிரமம் ஏற்படும். அடிக்கடி புத்தி சலனமாய் ஸ்திர புத்தி இல்லாமல் இருக்கும். தெய்வ பலம் ஒதுங்கி நிற்கும். வீண் நஷ்டங்களும், அபவாதங் களும் உண்டாகி விலகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். அதிகமான விரயம் உண்டுபண்ணும். ஆரோக்கியக் குறைவு காட்டும். மேலோர் பெரியோர்கள் ஆசியாலும், தெய்வபலத் தாலும் தோஷங்கள் விலகி சுபம் உண்டாகும். நூதனமாக ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேருதலும், கிரய விக்ரயங்களும் ஏற்படும். இராஜாங்க மூலமாயும், பெற்றோர்களாலும் சுபம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

## 7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். அன்யஸ்தலவாசமும், அதிக விரயமும், உண்டுபண்ணும். இல்லறத்திலும் ஜீவனத்திலும் கவலை காட்டும். வெகுதூர தேசத்திலிருந்து அழைப்புப் பத்திரமும், நஷ்ட தனமும் கிடைக் கும். நூதன தொழில் மூலமாய் நன்மையும் கீர்த்தியும் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபங்களைத்தரும். இல்லற சுகம் உண்டுபண்ணும். வியாபார மூலமாயும், உத்தியோக மூலமாயும் நன்மை உண்டாகும். பெற்றோர்களாலும், பெரி யோர்களாலும் நன்மை ஏற்படும். சுபகாரியங்கள் மூலம் அதிக செலவு ஏற்படச்செய்யும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமேயாகும்: சத்துருக்கள் சரண் அடைவார்கள். வியவகாரம் ஜெயிக்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். ஆரோக்கியம் உண்டுபண்ணும்.

நூதன தொழில் ஏற்பட்டு அதன் மூலம் விசேஷ கீர்த்தியும், நன்மையும் ஏற்படும். இராஜாங்க மூலமாயும், மேலோர் பெரியோர்கள் மூலமாயும் சதா நன்மையே உண்டாகும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்**

மகர ராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். இராஜாங்க மூலம் கீர்த்திபத்திரம் கிடைக்கும். உத்தியோக உயர்வும், ஆரோக்கியமும் உண்டாகும். குடும்பம் ஓங்கும். நூதனமான வஸ்திராபரணச் சேர்க்கைகளும், சுபசோபனாதிகளும் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.**

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். சகல காரியங்களும் ஆரம்பத்தில் விக்கினம் அடைந்து, பிறகு சாத்தியமாகும். அடிக்கடி சரீரத்தில் உபாதியைக் கொடுக்கும். வைத்திய செலவு அதிகமாகும். வீண் அலைச்சல்களை உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி ½ உத்திரட்டாதி - ரேவதி.**

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத் தரும். அடிக்கடி வீண் அலைச்சல்களும், வீண் செலவுகளும் ஏற்படும். குடும்பத் தொல்லைகளும், கவலைகளும் ஏற்படும். தெய்வபலம் முன்னின்று காக்கும். நூதனமான பிரபு தரிசனமும், பெற்றோர்களால் மேன்மையும் ஏற்படும். மாதக் கடைசியில் இரக சுகம் உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :— மேலோர்களுக்கும் பெரியோர்களுக்கும் கனதனவான்களுக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதாவது மேற்படி மாதத்தில் அடிக்கடி மழையால் தொல்லைகள் ஏற்படச் செய்யும். தான்யங்களுக்கும், பயிர்களுக்கும் ஈதிபாதைகள் ஏற்பட்டு சிரமத்தைக் கொடுக்கும். வியவசாய காரியங்கள் தவக்கத்துடன் நடக்கச் செய்யும், தக்ஷிண தேசத்தில் தர்ம பூமிகள் எது என்பது நிதர்சனமாகத் தெரியும். மேலோர்கள் பெரியோர்கள் எல்லோரும் தர்மத்தைக் கைவிடாமல் அடிக்கடி பெரிய க்ஷேத்திரங்களில் ருத்ரம், அதிருத்ரம், மஹாருத்ரம் இவைகளைச் செய்துகொண்டு, ஏழைகளுக்கு தானதர்மங்களும், அன்னதானமும் செய்துவர சகல துரிதங்களும் நிவர்த்தியாகி,

துர்பிக்ஷம் நீங்கி, உலகத்திலேயே இந்தியாவின் தக்ஷிண பிரதேசம் தான் முதன்மையில் இருந்துகொண்டு இருக்கும். விந்தியோத்தர தேசங்களிலும், அன்னிய தேசங்களிலும் தர்மம் குறைந்து, பரசக்ரபயத்தையும், உள்நாட்டுக் கலகங்களையும் உண்டுபண்ணுமாதலால் உலக நிர்வாகிகள் பயம் ஏற்படாமல் இருக்க ஸ்ரீ மஹாகாளி, ஸ்ரீ சரபேசுவரர், ஸ்ரீ வீரபத்திரர் முதலிய தேவதைகளை உபாசித்துக்கொண்டு அவரவர்களுக்கு யாகங்கள் நடத்திக்கொண்டுவர உலகம் சுபிக்ஷம் அடையும். கடவுள் காப்பார். சுபமஸ்து.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

We consisting 16 members of the employees of The Metal Box Co. of India Ltd. Madras 21, came to worship at this temple. We were impressed by the remarkable upkeep of the temple and its sourroundings We were received cordially and were shown around the temple aothorities as if we were their own family members.

All our members had mental satisfaction and peace after worship and would like to visit again with other members of our families.

1—10—67 (Sd.) N. H. Krishnan,
Leader of the Party.

My family was blessed with the opportunity to worship in this great temple. The temple is being maintained in a good condition and the staff are very courteous. The poojas are being peformed well. The devotees are indebted to Mahasannidhanam for the splendid way the temple is being maintained. The Superintendent and other members of the staff deserve the thanks of the worshippers.

3—10—67 (Sd.) R. Ratnaswami
District Munsiff, Thiruvaiyaru.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Kambahareswaraswmy Devasthanam, Tirubuvanam.

We a group of 16 members of the Metal Box Co., of India Ltd., Madras 21, worshipped to day at this temple, we congratulate the authorites for the facilities provided to us and also for giving detailed explanation of the significance of the presiding deity and the architecture.

We experienced peace of mind and solace after our worship and are grateful to the persons who helped us in showing around.

(Sd.) N. H. Krishnan,
Leader of the party

2—10—67.

### Dharmapuram Adhinam

### Sri Sattanathaswamy Devasthanam, Shiyali.

We are glad to visit this Holy Shrine again. We are glad that the same sereneness, and cleanliness maintained. This is a model temple. We are thankful to His Holiness for giving us facilities to have good Dharsan. We are grateful to the Executive Officer Sri Sowriraja Ayengar for explaining the various important aspects of this shrine.

(Sd.) K. Venkataswami Naidu,
(Sd.) K. Srinivasan,
(Sd.) M. K. Rangasamy,
Secretary, Young Men's Indian League.

Madras
1—10—67